RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
BUYING - SELLING - LEASE - PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 31, 05 யூலை 2024 இதழ்:- 06

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! யூலை மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளின்
வாழ்வாதாரத்திற்காகவும், கல்வி மேம்பாட்டிற்காகவும்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை
13வது ஆண்டாக நடாத்தும்
ஊட்டும் கரங்கள்
தமிழும் இசையும்
இராப்போசன விருந்தும்
யூலை 28, 2024
ஞாற்றுக்கிழமை - 5:30PM
METROPOLITAN CENTRE
3840 FINCH AVE EAST
SCRBOROUGH ( FINCH/ KENNEDY)
தொடர்புகளுக்கு 416 841 9600
இன்பத் தமிழ்ப் பேச்சு
சிறப்புச் சொற்பொழிவாளர், தமிழ் கூறும் நல்லுலகின் தன்னிகரற்ற பேச்சாளர்,
சொல்லின் செல்வி, மொழி அரசி, , பேராசிரியை
பர்வின் சுல்தானா
Zee தமிழ் சரிகமப புகழ்
கோபாலகிருஷ்ணன்
கனேடிய தமிழ்ப் பாடகர்களுடன்
இணைந்து வழங்கும்
இன்னிசை மாலை

வாசகர்களே!
கருணையாளர்களே!
மறவாதீர்கள்!
28 யூலை 2024
ஞாயிற்றுக்கிழமை
மாலை 5.30 மணி

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
3-1286 Kennedy Rd.
Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Desjardins Manulife Foresters

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

# தமிழ்த்தேசியப் பேரவை:- ஒரு புதிய கூட்டமைப்பின்உதயம்



29 யூன் 2024 ஆம் திகதி வவுனியா விருந்தினர் விடுதியில் ஒரு சந்திப்பு ஒழுங்கு படுத்தப்பட்டது. தமிழ் மக்கள் பொதுச்சபை என்று அழைக்கப்படும் மக்கள் அமைப்பு சந்திப்பை ஒழுங்குபடுத்தியது. இதில் தமிழ் பொது வேட்பாளரை ஏற்றுக் கொள்ளும் தமிழ் தேசிய கட்சிகள் 7 வருகை தந்தன. (9ம்பக்கம்)

# விடை பெற்றார் தமிழினத்தின் தலைமகன்

தமிழ் மக்கள் பாரம்பரியமாக வடக்கு, கிழக்கில் வாழ்ந்து வருகின்றார்கள். ஆகவே அவர்கள் உள்ளக சுயநிர்ணயத்துக்கு உரித்துடையவர்கள். அந்த அடிப்படையில் பிரிக்க முடியாத, பிளவுபடாத ஐக்கிய இலங்கைக்குள் சுயநிர்ணய அடிப் படையில் இணைந்த வடக்கு கிழக்கில் சமஷ்டி அடிப்படையில் அதியுச்சமான அளவில் அதிகாரங்கள் பகிரப்பட்டு அவை மீளப் பெறப் படாத வகையில் உறுதி செய்யப்பட வேண்டும்.

இந்தக் கூற்றுக்கள் 2009ஆம் ஆண்டு முள்ளி வாய்க்கால் முடிவுக்குப் பின்னர் உள்நாட்டிலும், சர்வதேசத்திலும் எந்தவிதமான விட்டுக் கொடுப்புக்களுக்கும் இடமின்றி மிக மிக உறுதியாக வெளிப்படுத்தப்பட்டவையாக இருக்கின்றன. அந்தக் கூற்றுக்களுக்காக வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் தமது ஆணையை தொடர்ந்தும் அளித்து வந்திருக்கின் றமையையும் கண் கூடாக கணாக்கூடியதாகவும் இருக்கின்றது. (15ம் பக்கம் பார்க்க)

ஈழநாடு:- மின்னிதழில் வாசிக்க eelanadu.ca



KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

## www.AgentSiva.com

*Your neighborhood sales representatives*



**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

Team SIVA
WILL BRING THE BEST RESULTS!

**Piravien Siva**
Sales Representative B.Comm.
**Dir: 647-221-5220**
piravien@gmail.com




21 Years Real Estate Experience

**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply

HOMELIFE HIGHER STANDARDS

Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


### Neilson/Tapscott

**Scarborough** $475,000
Bedrooms: 2 Washrooms: 2
close to the Hwy 401 and the TTC

### Corner Park St. N & Dalhousie

**Peterborough** $549,000
Bedrooms: 3+1 Washrooms: 2
Great Opportunity for Investors

### McCowan Rd & HWY 401

**Scarborough** $699,999
Bedrooms: 3 Washrooms: 2
Luxurious Penthouse Condo


### Lawrence /Morningside

**Scarborough** $425,000
Bedrooms: 3 Washrooms: 2
Large Open Balcony


### HWY 48 & High Street


**Georgina** $774,900
Bedrooms: 3 Washrooms: 3
Brand New Never Lived Homes


### Church St N & Rossland Rd W

**Ajax** $950,000
Bedrooms: 3 Washrooms: 3
Upgraded Hardwood Floor

### Taunton/Garden

**Whitby** $969,000
Bedrooms: 3 Washrooms: 2
Professionally Renovated Home


### Midland Ave/ Eglinton Ave

**Scarborough** $1,150,000
Bedrooms: 3 Washrooms: 2
Excellent Location, Min To Subway

### Dundas / Henry

**Whitby** $999,000
Bedrooms: 3+2 Washrooms: 2
Easy access to Whitby Go

### Dorian Drive & Christine Elliot
FOR LEASE

**Whitby** $ 2000
Bedrooms: 2 Washrooms: 1
Brand New Basement Unit

### Ninth line and 14th Ave
FOR LEASE

**Markham** $1,950
Bedrooms: 2 Washrooms: 1
Newly Renovated

### Warden / Finch
FOR LEASE

**Scarborough** $2,700
Bedrooms: 3 Washrooms: 2
Corner Unit In A High Demand Area

*Looking for more house?*

# www.AgentSiva.com

**WILL BRING THE BEST RESULTS!**

**PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!**

EELANADU
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# இந்தியா என்ன நினைக்கிறது?

இலங்கையின் அரசியல் தீர்மானங்கள் எதுவானாலும் அதில் வெளித்தலையீடுகள் தவிர்க்க முடியாதவை. குறிப்பாக, இந்தியாவின் கரிசனைகள் பிரதானமானவை. இலங்கை, இந்தியாவின் உடனடி அயல்நாடு என்னும் வகையிலும் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்திருப்பதாலும் இந்தியாவின் தலையீடுகள் தவிர்க்க முடியாதவை.

இந்த யதார்த்தத்தைப் புறந்தள்ள வேண்டுமென்று எவர் வேண்டுமானாலும் விரும்பலாம். ஆனால், இந்த யதார்த்தத்தை எவராலும் புறந்தள்ளவே முடியாது. இவ்வாறானதொரு பின்புலத்தில் ஜனாதிபதித் தேர்தல் நெருங்கி வரும் நிலையில் தேர்தல் தொடர்பில் இந்தியாவின் அவதானம் என்ன ஆர்வம் என்ன? இந்தக் கேள்விக்கான பதிலை அறிவதில் நிச்சயம் அனைவருமே ஆர்வத்துடன் இருப்பர்.

ஏற்கனவே, ஜே. வி. பியின் வேட்பாளர் அநுரகுமார திஸநாயக்க புதுடில்லிக்கு அழைக்கப்பட்டிருந்தார் இவ்வாறான தொரு பின்புலத்தில், சஜித் பிரேமதாஸவும் புதுடில்லிக்கு அழைக்கப்பட்டிருக்கின்றார். இவ்வாறான அழைப்புகள் ஒரு செய்தியைத் தெளிவாக முன்வைக்கின்றன. அதாவது, ஜனாதிபதித் தேர்தல் எதிர்பார்த்தவாறு சாதாரணமானதொரு தேர்தலாக இருக்கப் போவதில்லை. மாறாக, நெருக்கடிகள் மிக்க தேர்தலாகவே இருக்கப் போகின்றது.

இந்தியாவின் நலன்களுக்கு உகந்த வேட்பாளர் யார் என்றால் பதில் நிச்சயமான ஒன்றல்ல. ஆனால், ஒப்பீட்டிப்படையில் ரணில் மிகவும் பொருத்தமானவராக நோக்கப்படுவதற்கு அதிக வாய்ப்பு உண்டு. இதற்கு என்ன காரணம்? நிச்சயமாக இதற்கு ரணில் காரணமல்லர்.

மாறாக ரணிலுடன் விடயங்கள் தொடர்பில் புதிதாக எதனையும் கூற வேண்டியதில்லை. ஏற்கனவே, திட்டமிட்டவாறு வடக்கு கிழக்கில் மிகப் பெரிய முதலீட்டுத் திட்டங்களை முன்னெடுப்பதில் சிக்கல்கள் இருக்கப் போவதில்லை. ஆனால், புதிய ஒருவரென்றால் அவருக்கும் அவரின் குழுவினருக்கும் விடயங்கள் அனைத்தையும் புதிதாக விளங்கப்படுத்த வேண்டியிருக்கும் இதனால் காலவிரயம் ஏற்படும்.

ஒருவேளை சஜித் பிரேமதாஸ வெற்றி பெற்றாலும் இந்திய நலன்களுக்கு பெரியளவில் சிக்கல்கள் ஏற்படப் போவதில்லை. ஆனால், இங்கு இந்தியாவின் நலன்கள் மட்டும் விடயமல்ல. இந்து சமுத்திர பிராந்தியத்தில் சீனாவின் மேலாதிக்க நகர்வுகளை எதிர்கொள்ளும் அமெரிக்க நகர்வுகளுக்கும் சிக்கல்கள் ஏற்படாதவாறான அரசியல் சூழலொன்றை ஏற்படுத்தக் கூடியவர் யார் என்பதும் கவனத்தில் கொள்ளப்படும்.

ஏனெனில், இலங்கைக்குள் ஏற்படும் அனைத்து அரசியல் நகர்வுகளினதும் பாதகமான விளைவுகளை முதலில் எதிர் கொள்ளும் நாடு இந்தியா மட்டும் தான் அதன் பின்னர் தான் அமெரிக்கா இந்த விடயத்துக்குள் வரும். மகிந்த ராஜபக்ஷவின் சீனப் பயணமும் உற்று நோக்கப்பட வேண்டியது. இந்தப் பின்புலத்தில் நோக்கினால் இந்தியாவின் கரிசனைகள் தவிர்க்கவே முடியாதவை. ஆனால் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான இந்திய அவதானம் துலக்கமான ஒன்றாக இல்லை.

ஒன்றில் அவ சரப்பட்டு முடிவுகளை எடுக்க முடியாதென்னும் கணிப்பு இருக்கலாம் அல்லது சூழல் இன்னும் நன்றாகக் கனியும் வரையில் இந்தியா அமைதியாக இருக்கலாம். ஆனால், அநுரகுமாரவின் புதுடில்லி பயணமும் தற்போது சஜித் பிரேமதாஸவுக்கான அழைப்பும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான சிக்கலான நிலைமையை தெளிவாகவே படம் பிடித்துக் காட்டுகின்றது.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் எதிர் வரும் மாதங்களில் தமிழ் கட்சிகளின் அணுகுமுறைகள் கூர்ந்து உற்று நோக்கப்படலாம். தமிழ் பொது வேட்பாளர் விவகாரம் உற்று நோக்கப்படலாம். ஆனால், தமிழ் மக்களின் நலனை முன்னிறுத்தி சிந்தித்தால் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு சமரசத்துக்கு அப்பாலபட்ட ஒன்றாகவே இருக்க முடியும்.

## சம்பந்தரின் மறைவுக்கு இந்தியப் பிரதமர் மோடி இரங்கல்



இலங்கைத் தமிழரசுக்கட்சியின் சிரேஷ்ட தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இராஜவரோதயம் சம்பந்தனின் மறைவிற்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

சம்பந்தனின் மறைவு குறித்து அவர் எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள இரங்கலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூத்த தலைவர் ஆர்.சம்பந்தனை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர் நண்பர்களுக்கு ஆழ்ந்த இரங்கல். சம்பந்தன் உடனான இனிய நினைவுகள் எப்போதும் நினைவு கூரப்படும். சம்பந்தன் இலங்கையில் உள்ள தமிழர்களின் அமைதி, பாதுகாப்பு, சமத்துவதிற்காக தொடர்ந்து பாடுபட்டு வந்தவர் என தெரிவித்துள்ளார்.

## எம் தேசத்தில் யுத்தம் தின்ற பெற்றோர்களின் குழந்தைகள்





என் இனிய உறவுகளே! 13 ஆண்டுகளுக்கு முன் எமது இல்லங்கள் ஆரம்பிக்கப்பட்ட போது இந்தக் குழந்தைகள் போன்றவர்களை வாரி அணைத்து 86 குழந்தைகளோடு ஆரம்பித்து இன்று 423 குழந்தைகளின் அன்பு நிறைந்த இடமாகவுள்ளது அன்பு இல்லம். மூன்று வேளை உணவு, உடை, உறையுள் மட்டுமன்றி கல்வி மேம்பாடு விளையாட்டு, பரதநாட்டியம் என பல்வேறு துறைகளிலும் எமது இல்லக் குழந்தைகள் முன்னணி வகித்து வருகின்றார்கள். அன்பர்களே! அருகே காணப்படும் குழந்தைகள் இன்றும் ஆலய வீதிகளிலும் கடையோரங்களிலும் நிற்கும் குழந்தைகளைப் பொறுப்பேற்க முடியாதுள்ளமைக்கு எமது இல்லத்தின் நிதி நெருக்கடியே காரணமாகும். உங்கள் கருணையினை இவர்கள் பக்கமும் திருப்புங்கள்! எமது சந்ததியை நாமே காப்பாற்றுவோம்! 28 யூலை 2024 இவர்களுக்காகவும் வாருங்கள்! (12.13ம் பக்கம் பார்க்க)

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்



2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544

# தெல்லிப்பளையில் மகளிர் மற்றும் சிறுவர் இல்லங்களை உடனடியாக மூடுவதற்கு ஆளுநர் அதிரடியாக உத்தரவு

யாழ்ப்பாணம் தெல்லிப்பளை பகுதியில் இயங்கும் மகளிர் மற்றும் சிறுவர் இல்லங்கள் தொடர்பில், ஆளுநரின் நேரடி கண்காணிப்பின் கீழ் இயங்கும் அபயம் பிரிவிற்குக் கிடைத்த முறைப்பாட்டிற்கு அமைய, இரண்டு இல்லங்களையும் உடனடியாக மூடுமாறு வடக்கு ஆளுநர் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தின் ஆணையாளருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

மகளிர் இல்லம் ஒன்றில் பொருத்தமற்ற இடத்தில் நிறுவப்பட்ட சி.சி.ரி.வி கமராக்கள் தொடர்பிலும், பதிவு செய்யப்படாத சிறுவர் இல்லம் தொடர்பிலும் அபயம் பிரிவிற்கு முறைப்பாடு கிடைத்தது. அபயம் பிரிவினரால் கோரப்பட்டதற்கு அமைய தெல்லிப்பளை பிரதேச செயலாளரால் ஆளுநருக்கு கள விஜய விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த அறிக்கைகளின் பிரகாரம் தெல்லிப்பளை பகுதியில் இயங்கும் குறித்த இரண்டு இல்லங்களையும் மூடுமாறும், விடயம் தொடர்பான அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தின் ஆணையாளருக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வடக்கு மாகாணத்திற்குள் இயங்கும் சிறுவர் இல்லங்கள் தொடர்பில் மேற்பார்வை செய்து ஒரு வாரத்திற்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தின் ஆணையாளருக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. பதிவு செய்யாது இயங்கும் அனைத்து சிறுவர் இல்லங்களையும் உடனடியாக மூடுவதற்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. வெளி மாகாணங்களில் உள்ள சிறார்களை வரவழைத்து வடக்கு மாகாணத்திலுள்ள சிறுவர் இல்லங்களில் தங்க வைக்க அனுமதி வழங்க வேண்டாம் எனவும், அவ்வாறு தங்க வைக்கப்பட்டிருப்பின் உரிய நடைமுறைகளைப் பின்பற்றி அவர்களைச் சொந்த ஊருக்குத் திருப்பி அனுப்பி வைக்குமாறும் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்களத்தின் ஆணையாளராகத் சி.சுஜீவா வடக்கு மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளராகத் கு.காஞ்சனா ,வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளராக (நிர்வாகம்) திருமதி. அ.யோ.எழிலரசி நியமிக்கப்பட்டுள்ளனர்.




## இந்து மத தர்மமே கை கொடுக்கும் - பிரிட்டன் பிரதமர்

இந்து மத நம்பிக்கையில் இருந்து உத்வேகமும், ஆறுதலும் கிடைப்ப தாக பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் தெரிவித்துள்ளார்.

லண்டனில் உள்ள சுவாமி நாராயண் கோவிலுக்குச் சென்று தரிசனம் செய்த ரிஷி சுனக், தனது தேர்தல் பிரச்சார உரையில் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இதன் போது பகவத் கீதையை வைத்து, பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்றதில்தான பெருமை அடைவதாகவும், நமது கடமையை உண்மையாகச் செய்ய வேண்டும் எனவும் ரிஷிக் சுனக் குறிப்பிட்டுள்ளார். மேலும், இந்து மத நம்பிக்கையில் இருந்து உத்வேகமும், ஆறுதலும் கிடைப்பதாகவும், இதை தனது அன்பான பெற்றோர் தனக்கு கற்று கொடுத்து வளர்த்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது தான் தனது பிள்ளைகளுக்கும் இதனை கற்று கொடுப்பதாகவும், பொது சேவை செய்ய தர்மம் தான் தனக்கு வழிகாட்டுவதாக பிரித்தானிய பிரதமர் தனது உரையில் குறிப்பிட்டார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.






கனடா – அருள்மிகு
ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்
104 Rivalda Rd Northyork - On - M9M 2M8 (Weston/Sheppard)
Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 8.30 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

அருள்மிகு கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயில் பக்தர்களுக்கு வணக்கம். கனடா ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயில் இலாப நோக்கமற்ற தொண்டு நிறுவனமாக கனடா அரசாங்கத்தினால் அங்கீகாரம் பெற்றுள்ளது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

இதுவரை காலமும் கோயில் நிலம் வாங்குவதற்கு நன்கொடை கொடுத்த பக்தர்கள் அனைவரும் உங்கள் பழைய பற்றுச்சீட்டை கோயிலில் கொடுத்து கனடிய அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இலக்கம் பதியப் பெற்ற புதிய பற்றுச்சீட்டை கோயிலில் பெற்றுக் கொண்டு அரசாங்கத்திடமிருந்து வருமானவரி வரிச்சலுகையை பெற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இனி வரும் காலங்களில் கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயிலுக்கு நிலம் வாங்குவதற்கும் இப்போது நடைபெறும் திருப்பணிக்காக நன்கொடை செய்வதற்கும் அல்லது எந்தவிதமான பூஜைகள் திருவிழாக்களிற்கும் கோயிலில் பணம் கொடுக்கும் போது அதற்குரிய பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்ளுவதன் மூலம் அரசாங்கத்திடமிருந்து வருமானவரி வரிச்சலுகையை பெற்றுக்கொள்ளலாம் என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். ஓம் தாயே மகமாரி — நிர்வாகசபை

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# இலங்கை அரசியலில் சம்பந்தர் எனும் ஆளுமை!



இலங்கைத் தமிழரசுக்கட்சியின் சிரேஷ்ட தலைவரும் திருகோண மலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இராஜவரோதயம் சம்பந்தன் தனது 91 ஆவது வயதில் காலமானார்.

உடல்நலம் பாதிக்கப்பட்ட நிலை யில் கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலை யில் அவர் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்ததாக குடும்பத்தினர் உறுதிப்படுத்தினர்.

1933ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5ஆம் திகதி பிறந்த சம்பந் தன் இயற்கை எய்தும் போது அவருக்கு 91வயதாகும்.

இராஜவரோதயம் தம்பதியினரின் புதல்வராக திருகோணமலையில் பிறந்தார். 1956 ஆம் ஆண்டு இலங்கை தமிழ் அரசுக் கட்சியில் இணைந்தார். 1963 மற்றும் 1970 ஆம் ஆண்டுகளில் சம்பந்தனுக்கு தமிழரசு கட்சியின் தலைவர் எஸ்.ஜே. வி செல்வநாயகம் தேர்த லில் போட்டியிட வேட்பு மனு வழங்க முன் வந்தாலும் அவர் அதனை ஏற்கவில்லை.

1977 ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் திருகோண மலைத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று பாராளுமன்ற உறுப்பினர் ஆனார்

1983ஆம் ஆண்டு நடுப்பகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பாராளுமன்றத்தைப் புறக்கணித்தனர்.

1983ஆம் ஆண்டு ஏற்பட்ட ஜூலை கலவரத்திற்கு எதிர்ப்பை தெரிவித்து மூன்று மாதங்களுக்கு மேல் பாராளுமன்ற அமர்வுகளை புறக்கணித்ததால் சம்பந்தன் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை 1983. செப்டம்பர் 7 இல் இழந்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் இணைப் பொருளாளர், உபத் தலைவர் மற்றும் பொதுச் செயலாளராகவும் சம்பந்தன் பதவி வகித்திருந்தார்.

2001 ஆம் ஆண்டு சம்பந்தனின் அரசியல் வாழ்வில் மற்றுமொரு மைல் கல்லாக அமைந்தது. 2001 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் களம் இறங்கிய அவர் 18 வருட ங்களுக்கு பின்னர் மீண்டும் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டார். 2004 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சியின் கீழ் போட்டி யிட்டு அந்த கட்சியினை வழி நடத்தும் பொறுப்பினையும் அவர் ஏற்றார். 2004, 2010 ஆகிய இரண்டு பொதுத் தேர்தல்களிலும் திருகோணமலை மாவட்ட மக்க ளின் அமோக ஆதரவுடன் சம்பந் தன் வெற்றி பெற்றிருந்தார்.

2014 ஆம் ஆண்டு இலங்கை தமிழரசு கட்சியின் தலைமை பதவியை மாவை. சேனாதிராஜா விடம் அவர் ஒப்படைத்தார். எனினும் தொடர்ந்தும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் அனுபவ மிக்க சிரேஷ்ட உறுப்பினராக செயற்பட்டு வந்த இரா. சம்பந்தன். கடந்த பொதுத் தேர்தலிலும் கட்சி யினை வெற்றி பாதையில் வழி நடத்திச் சென்று 16 ஆசனங்களை பெற்றுக் கொடுத்தார். சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக 2015 ஆம் ஆண்டு முதல் 2018 அம் ஆண்டு வரை பதவி வகித்தார்.

2015 தேர்தலில் முக்கிய கட்சி களான ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி ஆகியன முறையே 106 மற்றும் 95 ஆசனங்களை கைப் பற்றியிருந்தன. ஐக்கி தேசிய கட்சி ஆட்சியமைப்பதற்குத் தேவை யான அறுதிப் பெரும்பான்மை கிடைக்காததால், இரண்டு முக்கிய கட்சிகளும் இணைந்து தேசிய அரசாங்கம் ஒன்றை அமைத்தன. இதனால் 16 ஆசனங்களைக் கைப்பற்றி மூன்றாவது இடத்தில் இருந்த தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் 2015 செப்டம்பர் 3 முதல் 2018 டிசம்பர் 18 வரை இலங்கையின் எதிர்க்கட்சித் தலை வராகப் பதவி வகித்தார்.

இலங்கை வரலாற்றில் இரண்டா வது தடவையாக தமிழர் ஒருவர் பாராளுமன்றத்தின் எதிர்கட்சித் தலைவராக தெரிவானமை குறிப் பிடத்தக்கது. இதற்கு முன்னர் 1977 ஆம் ஆண்டு அப்பாப் பிள்ளை அமிர்தலிங்கம் பாராளு மன்றத்தின் எதிர்கட்சித் தலை வராக பதவி வகித்தார்.

பல சவால்களுக்கு மத்தியில் தமிழர்களுக்காக குரல் கொடுத்து வந்த சம்பந்தன் உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் நன்மதிப்பை பெற்ற இராஜதந்திர மிக்க தலை வராகவும் விளங்கினார்.

தமிழ் பேசும் தமிழ், முஸ்லிம் மக்களின் அரசியல் உரிமைக்காக அன்று தொடக்கம் இறுதி வரை குரல் கொடுத்த தேசிய அரசியல் வாதியாக சம்பந்தன் அனைவரா லும் பார்க்கப்பட்டார்.

இலங்கையில் மாத்திரமன்றி உலக அளவில் பார்க்கப்படுகின்ற, மதிக்க ப்படுகின்ற மிகச் சிறந்த மூத்த அரசியல் வாதியாகவும் சம்பந்தன் விளங்கினார்.அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

# சம்பந்தரின் மறைவிற்கு அ.தி.மு.க இரங்கல்!



இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் ராஜவரோதயம் சம்பந்தன் ஐயாவின் ஆன்மா எல்லாம் வல்ல இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற பிரார்த்திக்கிறேன் என அதிமுக பொது செயலாள ரான எடப்பாடி பழனிச்சாமி விடுத்துள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

தமிழக முதல்வரை தொடர்ந்து முன்னாள் முதல்வரும், அதிமுக வின் பொதுச்செயலாளரும், சட்ட மன்ற எதிர்க்கட்சித் தலைவரு மான எடப்பாடி கே பழனிச்சாமி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி யில்,

இலங்கை தமிழர் அரசியல் வரலாற் றில் மறக்க முடியாதவரும், மறுக்க முடியாதவருமாகிய.. ஈழ தமிழ் சமூகத்தின் மிகப்பெரிய தூணாக திகழ்ந்தவருமான இல ங்கை தமிழரசு கட்சியின் தலைவர் ராஜவரோதயம் சம்பந்தன் ஐயா அவர்கள் தனியார் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் தனது 91 வது வயதில் கொழும்பில் காலமானார் என்ற செய்தி கேட்டு மிகுந்த வருத்தம் அடைந்தேன்.

இலங்கை தமிழரின் அடுத்த தலைமுறை பாதுகாப்பான வாழ் வியலை கட்டமைக்க ஒரு சரி யான அடித்தளத்தை அமைத்த தமிழின தலைவரான அவரது இழப்பு ஈழத்தமிழர் வரலாற்றில் ஈடு செய்ய முடியாத ஒன்றாகவே பார்க்கப்படுகின்றது அன்னாரது ஆன்மா எல்லாம் வல்ல இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற பிரார்த்திக்கிறேன் என தெரிவித்து ள்ளார்.

# தமிழ்ப் பொது வேட்பாளர் தோல்வியடைவாரா?

தமிழ் பொது வேட்பாளர் விவகாரம் பல்வேறு எதிர்ப்புகளுக்கு மத்தியில் முன்னகர்ந்து கொண்டி ருக்கின்றது. தமிழ் பொது வேட்பாளர் நிலைப் பாட்டை கொள்கையளவில் ஆதரிக்கும் ஏழு தமிழ்த் தேசிய கட்சிகளும் தமிழ் மக்கள் பொதுச் சபையும் ஓர் உடன்பாட்டுக்கு வந்திருக்கின்றன.

தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் ஏற்பட்ட முக்கிய நகர்வாக இதனைக் குறிப்பிடலாம். எனி னும், இன்னும் பல படிகளைத் தாண்ட வேண்டி யிருக்கின்றது. பல வகையான சவால்களையும் தாண்ட வேண்டியிருக்கும். ஏனெனில், தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை தோற்கடிக்க வேண்டும் என்னும் எண்ணத்துடன் தமிழ்த் தேசிய பரப்புக்குள்ளும் ஓர் அணியுண்டு.

ஒப்பீட்டு அடிப்படையில் ஏனைய அனைத்து வகையான சவால்களை விடவும் இவர்களால் எழக்கூடிய சவால் மிகவும் சிக்கலானது என்ப துடன், அதிக தாக்கம் செலுத்தக்கூடியது.

தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை தமிழ்த் தேசிய அரசியல் பரப்பிலிருந்து எதிர்ப்பவர்கள் முன்வைக்கும் பிரதான வாதம் தமிழ் பொது வேட்பாளருக்கு தமிழ் மக்கள் ஆதரவளிக்க மாட்டார்கள் தமிழ் பொது வேட்பாளர் பெரும் பான்மையான தமிழர்களின் ஆதரவைப் பெற மாட்டார் அது நடக்கவில்லையென்றால் ஒரு விஷப் பரீட்சையாகி விடும்.

குறிப்பாக, இவ்வாறான வாதத்துக்கு தலைமை தாங்குபவராக எம். ஏ. சுமந்திரன் இருக்கின்றார். அவர் இந்த விடயத்தில் வெளிப்படையான ஒரு வராக இருக்கின்றார். ஆனால், ஏன் சுமந்திரன் போன்றவர்கள் எதிர்ப்பதற்கு மாறாக அனைவருட னும் இணைந்து இதனை ஒரு வெற்றிகரமான விடயமாக மாற்றுவதற்கு உழைக்கக் கூடாது? அவ்வாறானதோர் அரசியல் தீர்மானத்தை எடுக்க முடியாதளவுக்கு அவர்களைத் தடுக்கும் காரணி என்ன? அந்தளவு கொழும்புடனான தேனிலவை முறித்துக் கொள்ள முடியாமல் இருக்கின்றதா? கொழும்புடன் அரசியல் ரீதியில் ஊடாடத்தான் வேண்டும்.

ஆனால் அந்த ஊடாட்டம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை மலினப் படுத்துவதாக இருக்கக்கூடாது. தமிழ் பொது வேட்பாளர் தோல்வியடைந்து விடுவார் என்னும் வாதத்தை முன் வைப்பவர்கள் ஒரு விடயத்தை தங்களின் வசதி கருதி மறந்து விடுகின்றனர்.

அதாவது, கடந்த பதினைந்து வருடங்களாக அவர்கள் முன்னெடுத்த அரசியல் நகர்வுகளும் படு மோசமான தோல்வியைத் தான் சந்தித்திருக்கின்றன என்பதை மறந்து விடுகின்றனர்.

இந்தக் காலகட்டத்தில் முன்னெடுக்கப்பட்டன என்று கூறப்படும் அனைத்து அரசியல் நகர்வு களையும் பிரதான மாக தீர்மானித்தவர்களில் ஒரு வர் எம். ஏ. சுமந்திரன். ஆனால், அவரோ தனது தோல்வியை ஆராயாமல் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை தோற்கடிப்பது பற்றி யோசிக்கி ன்றார்.

தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு பெரும் பான்மை ஈழ மக்களை சென்றடையுமானால் அது நிச்சயம் பெருவெற்றியை பெறும்.

அனைத்துக் கட்சிகளும் சிவில் சமூக அமைப்பு களும் புத்திஜீவிகளும் இது எங்களுடைய தமிழ்த் தேசிய பணி என்று எண்ணி அதற்காக உறுதி யுடன் அர்ப்பணிப்புடன் உழைத்தால் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு நிச்சயம் வெற்றி. யைப் பெறும். மக்களை நம்பினால் மட்டும் தான் அரசியலை முன்னெடுக்க முடியும்.


மாதம் இருமுறை வெளியாகும்

உங்கள் அபிமான

ஈழநாடு பத்திரிகையை 12 யூலை 2024
வெள்ளிக்கிழமை அச்சுப் பத்திரிகையாக

அனைத்து தமிழ் வர்த்தக நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு 416 841 9600

வாரம் தோறும் eelanadu.ca மின்னிதழ் மூலம் பார்வையிடலாம்

# சம்பந்தரின் அபிலாசைகளை நிறைவேற்றுவதே எமது கடமை! நாடாளுமன்றத்தில் நிகழ்த்திய விசேட உரையில் ரணில் தெரிவிப்பு



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், மறைந்த நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் எப்பொழுதும் இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாட்டிற்காக பங்காற்றியதாவும், அதிகாரப் பகிர்வு மேற்கொள்ளப்பட வேண்டிய விதம் தொடர்பில் அவருக்கு தனியான நிலைப்பாடு இருப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

இரா.சம்பந்தனின் மறைவு தொடர்பில் நாடாளுமன்றத்தில் 01 யூலை 2024 விசேட உரையொன்றை நிகழ்த்திய போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது நான் இந்த உரையாற்றும் போது, அன்று என்னுடன் நாடாளுமன்றத்திற்கு வந்தவர்களில் எஞ்சியிருந்த எனது சகாக்களில் ஒருவரான சம்பந்தன் இப்போது எங்களுடன் இல்லை.

மிகவும் கடினமான கால கட்டங்களில் அவருடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவர் ஆற்றிய பங்களிப்பை நன்றியுடன் நினைவு கூர்கிறேன். அவர் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி (TULF) மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பு (TNA) ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்திய போதிலும், அவர் எப்போதும் இலங்கையின் ஆட்புல ஒருமைப்பாட்டிற்காக பங்காற்றினார்.

ஒருமுறை அவர் என்னுடன் உரையாற்றும் போது ரணில், நான் நாட்டைப் பிரிப்பேன் என்று நினைக்கிறீர்களா? நான் சிறுவனாக இருந்த போது 1948ல் நாடு சுதந்திரம் பெறுவதைப் பார்க்கச் சென்றிருந்தேன் என்று அவர் என்னிடம் குறிப்பிட்டார்.

அதனைக் காணும் வாய்ப்பு எங்களுக்குக் கிடைக்கவில்லை. நம்மில் பலர் அப்போது பிறக்கவே இல்லை. ஆனால் அதிகாரப் பகிர்வு தொடர்பில் அவர் தனித்துவமான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார். அதைப் பற்றி விவாதம் செய்ய அவசியமில்லை. அவர் அதற்கான போதுமான பங்கை செய்துள்ளதாக நினைக்கிறேன். அதனை நிறைவு செய்ய இன்னும் கொஞ்சம் பங்காற்ற வேண்டியுள்ளது. மேலும் அந்த வேலைகளை நிறைவு செய்வதே அவருக்கு செய்யக் கூடிய மிக உயர்ந்த பங்களிப்பாக இருக்கும் இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

# பதவிக்காலம் முடிவதற்கு முன் தமிழ்த்தேசியப் பிரச்சனைக்கு தீர்வைக் காணுங்கள் - சுமந்திரன்



சம்பந்தனின் ஆயுட் காலத்திலேயே தமிழ்த் தேசியப் பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்று இங்கு ஜனாதிபதி கூறினார். அதனால் ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவதற்கு முன்னர் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ் மாவட்ட உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வேண்டுகோள் விடுத்தார்.

பாராளுமன்றத்தில் 02 யூலை 2024 செவ்வாய்க்கிழமை இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவர் இரா. சம்பந்தனின் மறைவு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனுதாபம் தெரிவித்து உரையாற்றிய பின்னர் அது தொடர்பில் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர மேலும் தெரிவிக்கையில்,

சம்பந்தனின் மறைவு தொடர்பாக அனுதாபம் வெளியிட்டமைக்கு ஜனாதிபதி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். ஜனாதிபதி தனது உரையின் போது தானும், சம்பந்தனும் ஒன்றாக பாராளுமன்றம் வந்தமை தொடர்பில் குறிப்பிட்டதுடன் சம்பந்தனின் ஆயுட் காலத்திலேயே தமிழ்த்தேசியப் பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் துரதிஷ்டவசமாக அவர் மறைந்து விட்டார் எனவும் கூறினார்.

இந்நிலையில் நான் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி கூறுவது என்னவென்றால், தற்போதைய ஜனாதிபதியின் பதவிக் காலம் முடிவதற்கு முன்னர் அதாவது இந்த வருடம் ஒக்டோபர் முடிவதற்கு முன்னர் இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்று வினயமாக கேட்கின்றேன். நாட்டு மக்கள் அனைவரும் திருப்தியடையும் வகையில் இந்தப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்றார்.


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring
(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி.இளஞ்செழியன்

Tel: 416-524-0424

# கனடா குகதாசன் திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினராகின்றார்!


தமிழ் தேசிய கூட்டமைப்பின் சிரேஷ்ட தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அமரர் இரா. சம்பந்தனின் மறைவினால் ஏற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் வெற்றிடத்திற்கு கனடாவில் இருந்து சென்ற இன உணர்வாளர் சண்முகம் குகதாசனின் பெயர் வர்த்தமானியில் தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் சார்பில் 2020 ஆம் ஆண்டு இடம்பெற்ற பாராளுமன்ற தேர்தலில் சண்முகம் குகதாசன் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்டிருந்தார்.

அந்த தேர்தலில் இலங்கை தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவர் காலஞ்சென்ற பெருந்தலைவர் இராஜதவரோதயம் சம்பந்தனுக்கு பின்னர் அதிகூடிய வாக்குகளை அவர் பெற்றிருந்தார். பொதுத் தேர்தலில் அவர் 16,770 வாக்குகளைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தமிழ் தேசிய கூட்டமைப்பின் புதிய தலைவராக குகதாசன் நியமிப்பது என மத்திய குழு தீர்மானம் எடுத்துள்ளதாக இலங்கை தமிழரசுக்கட்சியின் முன்னாள் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினரும் ஆகிய சோ.மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

மறைந்த இலங்கை தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனின் நினைவேந்தல் யாழ்ப்பாணம் மார்ட்டீன் வீதியில் அமைந்துள்ள இலங்கை தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் நடைபெற்றது.


ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
பகுதி I : தொகுதி (I) - பொது
அரசாங்க அறிவித்தல்கள்



இதன் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே, மாவை சேனாதிராஜா இவ்வாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், திருகோணமலை என்னும் பிரதேசத்தில் தமிழர்களுடைய தலைநகரம் நில ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி சிங்கள மாயமாகி, பௌத்த மதமாகி இருக்கின்ற இந்த காலகட்டத்தில் மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் நிலத்தின் விடுதலைக்காக எங்களை கொள்கையினை நிலைநாட்டுவதற்காக எங்கள் பெரும் தலைவரை இழந்திருக்கின்றோம்.

அடுத்ததாக திருகோணமலை மாவட்டத்தின் குகதாசன் அதிவிருப்பு வாக்குகளை பெற்றதன் காரணமாக அவரை அடுத்த தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவராக தெரிவு செய்வதற்கு மத்திய செயற்குழு தீர்மானித்திருக்கின்றது.

மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் அவர்களது இறுதிக்கிரியை எதிர் வரும் 07.07.2024 அன்று இடம்பெற்றதன் பின்னர் தமிழ் தேசிய கூட்டமைப்பின் மத்திய செயற்குழு ஒன்றுகூடி குறித்த வெற்றிடத்திற்கு குகதாசன் அவர்களை நியமிப்பது என எண்ணியுள்ளோம்.

தேர்தலிலே திருகோணமலை மாவட்டத்தில் மறைந்த தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமாகிய இரா.சம்பந்தனுக்கு அடுத்தபடியாக கூடுதல் வாக்குகளை குகதாஸ் பெற்றதன் காரணமாக அவரை நியமிப்பது என்று மத்திய குழு தீர்மானம் எடுக்கும் என நம்புகின்றேன் என்றார்.

எதிர் வரும் ஓரிரு சில தினங்களில் இலங்கை பாராளுமன்றில் நாடாளுமன்ற உறுப்பினராக சண்முகம் குகதாசன் சத்தியப்பிரமாணம் செய்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# புற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ள கஜேந்திரகுமார் உண்மையை மூடி மறைக்கும் த.தே.ம.முன்னணி



தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் கடுமையான புற்று நோயினால் பாதிக்கப்பட்டு வருவதாகவும் அவரது உடல்நிலை நாளுக்கு நாள் மோசமடைந்து வருவதாகவும் தென்னிலங்கை ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சுகவீனமுற்றிருப்பதால் கட்சியின் தலைமைப் பொறுப்பும் நிர்வாகப் பொறுப்பும் கட்சியின் மற்றுமொரு உறுப்பினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன், அவருக்கு நாடாளுமன்ற அமர்வுகளில் பங்கு பற்ற முடியாத நிலையில் மூன்று மாத காலத்துக்கு விடுமுறை கோரியுள்ளதாகவும் அதற்கு அனுமதி கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதை தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தீவிரமான புற்றுநோய் தாக்கத்துக்குள்ளாகியுள்ளதாக ஊடகங்களில் வெளியாகும் செய்திகள் தொடர்பில் கருத்து வெளியிட கட்சியின் பேச்சாளர் க.சுகாஷ் மறுத்துள்ளார்.

தென்னிலங்கை ஊடகமொன்று வெளியிட்டுள்ள செய்தி தொடர்பில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்க மறுத்த சுகாஷ், அவர் அவுஸ்திரேலியாவில் சாதாரண மருத்துவ சிகிச்சை பெற்று வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு மூன்று மாத கால விடுமுறை வழங்குமாறு எதிர்க்கட்சியின் பிரதம அமைப்பாளர் லக்ஸ்மன் கிரியெல்ல முன்மொழிந்திருந்தார். இதனை தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் வழிமொழிந்தார்.

இதையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு 3 மாத கால விடுமுறை வழங்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தீவிரமான புற்றுநோய் தாக்கத்துக்குள்ளாகியுள்ளதன் காரணமாக அவருக்கு குறித்த விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக தென்னிலங்கை ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த நோய்க்கு சிகிச்சை பெற்றுக் கொள்வதற்காக அவர் வெளிநாடொன்றுக்கு சென்றுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிலையில், தமது கட்சித் தலைவரின் நோய் நிலைமை தொடர்பில் வெளிப்படையாக கருத்து தெரிவிக்க கட்சியின் பேச்சாளர் க.சுகாஷ் மறுத்துள்ளார்.

# சம்பந்தரின் மறைவு

இராஜவரோதயம் சம்பந்தன் அவர்களின் நான்கு தசாப்தகால அரசியல் பயணம் முடிவுற்றது. தமிழ் மக்கள் மத்தியில் வாழ்ந்த ஒரு முது பெரும் அரசியல்வாதி என்னும் வகையில் அவரின் மறைவுக்கு 'ஈழநாடு' சிரம்தாழ்த்திய அஞ்சலியை பதிவு செய்கின்றது.

சம்பந்தன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் கூட்டமைப்பின் தாய் கட்சியென்னும் அடையாளத்தை கொண்டிருந்த இலங்கை தமிழ் அரசு கட்சியினதும் தலைவராக இருந்தவர். சம்பந்தன் அரசியல் வாழ்விலிருந்து விடை பெற்றிருக்கும் இன்றைய காலகட்டம் என்பது சம்பந்தனை பெருமைப்படுத்தக் கூடியதாக இல்லை என்பதே கசப்பான உண்மையாகும்.

ஏனெனில், அவரின் தலைமைத்துவத்தின் கீழ் இயங்கிய இரண்டு பிரதான அரசியல் கட்சிகளுமே அவரின் காலத்திலேயே சீரழிந்து விட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இல்லாமல் போய் விட்டது. இலங்கை தமிழ்அரசுக் கட்சி குற்றுயிருடன் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது. தமிழ் மக்கள் மத்தியில் ஒரு வலுவான மாற்று அரசியல் கட்சி இல்லாமைதான் தமிழ் அரசு கட்சியின் ஒரேயொரு பலமாகும். இலங்கை தமிழ் அரசு கட்சி உருவாக்கப்பட்டு எழுபத்தைந்து வருடங்களாகின்றன.

இந்தக் காலத்தில் மிதவாத அரசியல் பாசறையில் உருவாகியவர்களில் அனுபவமும் ஆளுமையும் மிக்க தலைவர்களில் சம்பந்தன் இறுதியானவர். சம்பந்தனுடன் மூத்த அரசியல் தலைவர் என்னும் பாரம்பரியம் முடிவுறுகின்றது. இதிலுள்ள சங்கடமான அதேவேளை நெருடலான அரசியல் உண்மை என்னவென்றால், தமிழ் மக்கள் கண்ட அனுபவமும் ஆளுமையும்மிக்க அரசியல்வாதிகள் எவருமே தங்களின் காலத்தில் அரசியல் அடைவுகள் எதனையும் அடையாமலேயே மறைந்து போயிருக்கின்றனர் அடுத்த தலைமுறைக்கு ஆக்கபூர்வமான எந்தவோர் அரசியல் மரபையும் விட்டுச் செல்லாதவர்களாகவே மறைந்து போயிருக்கின்றனர்.

இந்த வரிசையில் இறுதியாக சேர்ந்திருப்பவர்தான் சம்பந்தன். 2009இற்கு பின்னரான அரசியல் காலகட்டம் என்பது சம்பந்தனின் காலகட்டம் தான். இந்தக் காலகட்டத்தில் சம்பந்தன் அரசியல் ரீதியில் எதனை அடைந்தார் என்றால் பதில் பூச்சியமாகும். வெறும் வார்த்தைகளிலும் வாக்குறுதிகளிலுமே அவரின் காலம் கழிந்திருக்கின்றது. உண்மையில், சம்பந்தன் அரசியல் தலைமைத்துவத்தை பொறுப்பேற்ற காலகட்டமானது தமிழ்த் தேசிய அரசியலில் ஒரு திருப்புமுனையாகும்.

மிதவாத அரசியலின் தோல்வி ஆயுதப் போராட்டத்தின் தோல்வி ஆகிய இரு தோல்விகளிலிருந்தும் கற்றுக் கொண்டு பயணிக்க வேண்டிய காலகட்டம் தான் சம்பந்தனின் காலகட்டமாக இருந்தது. ஆனால் சம்பந்தனோ, தனது வரலாற்று முக்கியத்துவத்தை உணராத ஒருவராகவே தனது அரசியல் வாழ்வை முடித்திருக்கின்றார்.

2015இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட போது சில வாய்ப்புகள் கிடைக்கப் பெற்றன. அதனை உச்சளவில் பயன்படுத்தியிருக்கலாம். ஆனால், சம்பந்தன் வாய்ப்பைத் தவற விட்டார். வாய்ப்புகளை தவற விடுவதில் இரண்டு பக்கங்கள் உண்டு. ஒன்று, தங்களைப் பற்றி அளவுக்கதிகமான நம்பிக்கையிலிருந்து சிந்திக்கும் போது சில வாய்ப்புகள் தவறவிடப்படுவதை உணர முடியாமல் போகின்றது இரண்டு, கடந்த கால வரலாற்றிலிருந்து கற்றுக் கொள்ள மறுக்கின்றபோது மீண்டும் முன்னர் இழைக்கப்பட்ட தவறுகளே மீளவும் நிகழ்கின்றன.

இந்த விடயத்தில் சம்பந்தன் இரண்டாவது வகை. சம்பந்தனிடம் தலைமைத்துவம் இருந்ததுதான் எவ்வாறான தீர்மானங்களை எடுத்தாலும்கூட, அதனை கேள்விக்கு உள்ளாக்கக் கூடியவர்கள் அரசியல் அரங்கில் இருந்திருக்கவில்லை.

இந்த சந்தர்ப்பத்தை உச்சமாக பயன்படுத்தியிருந்தால் 2015இல் கிடைக்கப்பெற்ற அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி அரசமைப்பில் உள்ளவற்றை முதலில் முழுமையாக அமுல்படுத்துவதில் வெற்றி பெற்றிருக்கலாம் அத்தோடு, இந்தியாவின் உதவியுடன் வடக்கு, கிழக்கின் அபிவிருத்திக்கான வலுவான அடித்தளமொன்றை ஏற்படுத்தியிருக்கலாம்.

ஆனால் பேருந்து மீண்டும் தவற விடப்பட்டது. பேருந்தை தவற விடுவதே தமிழரின் அரசியல் வரலாறாக நீண்டு செல்கின்றது. இந்த வரலாற்று பட்டியலில் சம்பந்தனும் சேர்ந்துவிட்டார். எவ்வாறான அரசியல் கருத்து பேதங்கள் இருந்தாலும் கூட தமிழ்த் தேசிய அரசியலில் நான்கு தசாப்தங்களாக வாழ்ந்திருக்கும் ஒருவர் என்னும் வகையில் மூத்த தலைவர் சம்பந்தனுக்கு சிரம்தாழ்த்துவது நமது கடமையாகும்.

# சம்பந்தரின் மறைவிற்கு தமிழக முதல்வர் இரங்கல்!





இலங்கைத் தமிழர்களின் முதுபெரும் அரசியல் தலைவர் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா சம்மந்தன் மறைந்த செய்தியறிந்து மிகுந்த வேதனை அடைந்தேன். சம்பந்தன் அவர்களை இழந்து தவிக்கும் அவரது அமைப்பினருக்கும், இலங்கை தமிழ் உறவுகளுக்கும் தமிழ்நாட்டு மக்களின் சார்பாக எனது ஆழ்ந்த இரங்கல் என தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டிருக்கும் செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, இலங்கை தமிழர்களின் முதுபெரும் அரசியல் தலைவர். தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மறைந்த செய்தியறிந்து மிகுந்த வேதனை அடைந்தேன்.

தமிழர்கள் மட்டுமல்லாது சிங்களவர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரின் மரியாதையை பெற்ற அரும் பெரும் தலைவராக திகழ்ந்தவர் சம்பந்தன் அவர்கள். இறுதி மூச்சு வரையிலும் தமிழ் மக்களின் நலனுக்காகவே சிந்தித்தார். செயல்பட்டார். நாடாளுமன்றவாதியாக அரை நூற்றாண்டு காலம் அவர் ஆற்றிய பங்களிப்புகள் இலங்கையின் அரசியலில் பாரதூரமான தாக்கத்தை செலுத்தி வந்தன. இலங்கை தமிழ் மக்களுக்கான அதிகார பகிர்வுக்காக மிக நீண்ட காலம் அறவழியில் சம்பந்தன் அவர்கள் போராடி வந்தார்.

இந்தியாவோடும், தமிழ்நாட்டுடனும் மிகச்சிறந்த நட்புறவை சம்பந்தன் அவர்கள் பேணி வந்தார். தலைவர் கலைஞர் அவர்களின் நண்பராகவும், இலங்கை தமிழ் மக்களின் பிரதிநிதியாகவும், பலமுறை அவரை சந்தித்து மிகவும் முக்கியமான அரசியல் விவகாரங்கள் குறித்து சம்பந்தன் ஆலோசித்துள்ளார். 2015 ஆம் ஆண்டில் சம்பந்தன் இலங்கை நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட போது எனது அருமை நண்பர் தலைவர் அமிர்தலிங்கம் அவர்களுக்கு பிறகு தமிழர் ஒருவர் இலங்கை நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக ஆகி உள்ளது மகிழ்ச்சிக்குரியது. இலங்கை தமிழர்கள் அனைவரும் தங்கள் வாழ்வில் விடிவு காலம் ஏற்படாதா..! என நீண்ட நாட்களாக எதிர்நோக்கி இருக்கும் வேளையில் எதிர்க்கட்சித் தலைவராக சம்பந்தன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது நமக்கெல்லாம் ஓர் நம்பிக்கையை தருகிறது' என முத்தமிழ் அறிஞர் கலைஞர் வாழ்த்தி இருந்தது குறிப்பிடத்தக்கது.

2016 ஆம் ஆண்டு 13வது முறையாக தலைவர் கலைஞர் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட போது சம்பந்தன் அவர்களும், 'இது ஒரு சாதாரண சாதனையல்ல. எல்லோராலும் பாராட்டப்பட வேண்டிய ஒரு சாதனையாகும். இலங்கை தமிழ் மக்களுடைய பிரச்சனைக்கு ஒரு நியாயமான நிரந்தரமான அரசியல் தீர்வை பெறுவதற்கு உங்களுடைய ஆக்கபூர்வமான பங்களிப்பு தொடர வேண்டும்' என வாழ்த்து தெரிவித்திருந்தார்.

ஈழ தந்தை செல்வா, நாவலர் அமிர்தலிங்கம் ஆகியோருக்குப் பிறகு இலங்கை அரசியலில் மிகவும் போற்றத்தக்க தலைவராக விளங்கிய இரா. சம்பந்தன் அவர்களின் இடத்தை இலங்கை அரசியலில் எவராலும் எளிதில் ஈடு செய்ய முடியாதது. அவரது மறைவு இலங்கை தமிழ் மக்கள் மட்டுமின்றி உலகெங்கிலும் வாழும் தமிழ் சொந்தங்களுக்கும் பேரிழப்பாகும்.

இலங்கை தமிழ் மக்களின் உரிமைகளுக்காக வாழ்நாள் எல்லாம் குரல் கொடுத்த மாபெரும் அரசியல் ஆளுமையான சம்பந்தன் அவர்களை இழந்து தவிக்கும் அவரது அமைப்பினருக்கும், இலங்கை தமிழ் உறவுகளுக்கும், தமிழ்நாட்டு மக்களின் சார்பாக எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்'' என குறிப்பிட்டுள்ளார்.

## இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா இரங்கல்

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் சிரேஷ்ட தலைவர் மறைவு ஆழ்ந்த கவலை அளிக்கிறது. அவரை பல சந்தர்ப்பங்களில் சந்தித்து உரையாடியுள்ளேன். இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு அவர் ஆற்றிய முக்கிய பங்களிப்பிற்காகவும், இந்தியா மீதான அவரது நல்லெண்ணத்திற்காகவும் அவர் எப்போதும் நினைவுகூரப்படுவார். அவரது பிரிவால் வடும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்கள் என தெரிவித்துள்ளார்.




# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224,** Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com





# தமிழ்த்தேசியப் பேரவை:- ஒரு புதிய கூட்டமைப்பின்உதயம்

29 யூன் 2024 ஆம் திகதி வவுனியா விருந்தினர் விடுதியில் ஒரு சந்திப்பு ஒழுங்கு படுத்தப்பட்டது. தமிழ் மக்கள் பொதுச்சபை என்று அழைக்கப்படும் மக்கள் அமைப்பு சந்திப்பை ஒழுங்குபடுத்தியது. இதில் தமிழ் பொது வேட்பாளரை ஏற்றுக் கொள்ளும் தமிழ் தேசிய கட்சிகள் 7 வருகை தந்தன.

கட்சிகளுக்கும் தமிழ் மக்கள் பொதுச் சபைக்கும் இடையில் ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்குவதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றை எழுதுவது மேற்படி சந்திப்பின் நோக்கம். காலை 10.00 மணியிலிருந்து பிற்பகல் 4.00 மணி வரை நடந்த சந்திப்பின் முடிவில் ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கை இரு தரப்பாலும் எழுதப்பட்டு ஏற்றுக் கொள்ளப் பட்டது. அந்தப் புரிந்துணர்வு உடன் படிக்கையின் அடிப்படையில் உருவாக்கப்படும் பொதுக் கட்டமைப்பை தமிழ்த் தேசியப் பேரவை என்ற பெயரில் அழைப்பது என்று முடிவு எடுக்கப்பட்டது.

கொள்கைவில் ஏற்றுக் கொள்ளப் பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடும் சம்பிரதாயபூர்வ




நிகழ்வு அடுத்த மாதம் 6 ஆம் திகதி இடம்பெறும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. இந்நிகழ்வு யாழ்ப்பாணத்தில் இடம் பெறும் என்றும் அறிவிக் கப்பட்டுள்ளது.

குறுகிய காலத்துக்குள் மூன்று கட்ட மைப்புப் பெயர்கள் புழக்கத்துக்கு வந்துள்ளன. முதலில் வவுனியாவில் ஏப்ரல் மாதம் 30 ஆம் தேதி கூடிய பொழுது அது சிவில் சமூகங்களின் கூட்டிணைவு என்று அழைக்கப் பட்டது.அதே கூட்டிணைவு பின்னர் அதிகளவு குடிமக்கள் சமூகங்களை இணைத்துக் கொண்டு தன்னை ஜன நாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டமைப்புகளின் மூலம் பலப்படுத்திக் கொண்டு இதன் பெயரை தமிழ் மக்கள் பொதுச்சபை என்று அழைத்துக் கொண்டது.

அந்தப் பொதுச்சபையானது தொடர்ச்சியாக மக்கள் மத்தியில் இறங்கி சிறிய மற்றும் பெரிய சந்திப்புகளை நடத்தி வருகின்றது. தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பாக கருத்தறிவதும் கருத்துக்களைப் பரப்புவதும் சந்திப்புகளின் நோக்கம் ஆகும்.

மேற்படி தமிழ் மக்கள் பொதுச்சபையானது கட்சிகளோடு இணைந்து ஏற்படுத்திக் கொண்ட பொதுக் கட்டமைப்புக்கு தமிழ்த் தேசியப் பேரவை என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. இப்பேரவையானது எதிர் காலத்தை ஜனாதிபதி தேர்தலில் ஒரு தமிழ் பொது வேட்பாளர் நிறுத்தத் தேவையான உப கட்டமைப்புகளை உருவாக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய பேரவையில் மக்கள் அமைப்பை சேர்ந்தவர்களும் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் சம அளவில் இருப்பார்கள். அது போலவே அப் பொதுக் கட்டமைப்பின் கீழ் உருவாக்கப்படும் உப கட்டமைப்புகளும் சம அளவுக்கு மக்கள் அமைப்பை சேர்ந்தவர்களையும் கட்சிகளைச் சேர்ந்தவர்களையும் கொண்டிருக்கும்.

இந்த உபகட்டமைப்புகளில் ஒன்று தான் யார் பொது வேட்பாளர் என்பதனைத் தீர்மானிக்கும். மற்றொரு கட்டமைப்பு பொது வேட்பாளருக்குரிய தேர்தல் அறிக்கையைத் தயாரிக்கும். மற்றொரு கட்டமைப்பு பிரச்சாரப் பணிகளைத் திட்டமிடும் முன்னெடுக்கும். மற்றொரு கட்டமைப்பு தேர்தல் நிதியை நிர்வகிக்கும். இவ்வாறு கட்டமைப்புகளை உருவாக்கி அக்கட்டமைப்புகளுக்கு ஊடாக ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவது என்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியப் பேரவை என்று அழைக்கப்படும் புதிய கட்டமைப்பானது ஈழத் தமிழர்களின் அரசியல் வரலாற்றில் ஒரு புதிய தோற்றப்பாடு அல்ல. ஏற்கனவே தமிழ் மக்கள் பேரவையில் அது பரிசோதிக்கப் பட்டிருக்கின்றது. 2014க்குப் பின் தமிழ் மக்கள் பேரவையானது கட்சிகளையும் மக்கள் அமைப்புகளையும் கொண்ட ஒரு ஹைபிரிட் வடிவத்தில் உருவாக்கப்பட்டது. அதன் இணைத் தலைமைகளாக மக்கள் பிரதிநிதிகளும் பிரதிநிதித்துவ அரசியலில் ஈடுபடாத சிவில் சமூகத்தில் இருந்து வந்தவர்களும் காணப்பட்டார்கள்.

அப்படி ஒரு கட்டமைப்பை உருவாக்குவதற்கு அந்த காலகட்டத்தில் ஒரு தேவை இருந்தது. அக் கட்டமைப்பு அதாவது தமிழ் மக்கள் பேரவையானது குறிப்பிட்ட காலகட்டத்திற்கு தமிழ் அரசியலில் அதிகரித்த அதிர்வுகளை ஏற்படுத்தியது. இரண்டு எழுக தமிழ்களை நடாத்தியது. அது மட்டுமல்ல ஒரு புதிய யாப்பை உருவாக்குவதற்குத் தேவையான முன்மொழிவையும் முன் வைத்தது. அம் முன் மொழிவானது கடந்த 15 ஆண்டுகளிலும் இனப்பிரச்சினைக்கு தீர்வாக முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளில் முக்கியமானது. அது மக்கள் பிரதிநிதிகளும் பிரதிநிதித்துவ அரசியலில் ஈடுபடாத சிவில் சமூகங்களும் இணைந்து தயாரித்த ஒரு முன் மொழிவு என்ற அடிப்படையில் அதற்கு ஒரு காலம் முக்கியத்துவம் உண்டு.உள்ளடக்க முக்கியத்துவம் உண்டு. அந்த முன்மொழிவு இப் பொழுதும் செல்லுபடியாகக்கூடியது.

தமிழ் மக்கள் பேரவையானது பெருமளவுக்கு பிரமுகர் மைய அமைப்பாக இருந்தது. மேலிருந்து கீழ் நோக்கிக் கட்டப்பட்டது. அப்பிரமுகர்களில் ஒருவராக இருந்த விக்னேஸ்வரன் ஒரு கட்டத்தில் ஒரு புதிய கட்சியை அறிவித்ததோடு தமிழ் மக்கள் பேரவை அதன் மகிமையை இழக்கத் தொடங்கியது. மேலும் உள்ளூராட்சி சபைத் தேர்தலையொட்டி பேரவைக்குள் அங்கம் வகித்த கட்சிகள் ஒரு பொது உடன்பாட்டைக் காணத் தவறிய பின்னணியில் தமிழ் மக்கள் பேரவையானது படிப்படியாக இறந்து போய் விட்டது.

எனினும் அது அதன் இறுதி கால கட்டத்தில் உருவாக்கிய ஒரு கட்டமைப்புத் தான் ஜனாதிபதி தேர்தலுக்கான சுயாதீனக் குழு ஆகும். கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது தமிழ் மக்கள் எப்படிப்பட்ட ஒரு உபாயத்தை கையாள வேண்டும் என்பதைக் குறித்து ஆராய்வதற்காக அப்படி ஒரு சுயாதீனக் குழுவை தமிழ் மக்கள் பேரவை உருவாக்கியது.

அச்சுயாதீனக் குழுவானது ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்ற பரிந்துரையை முன் வைத்தது. அந்த அடிப்படையில் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகளை அக்குழு சந்தித்தது. சில கட்சிகள் அக்கோரிகையை ஏற்றுக் கொண்டன. சில கட்சிகள் ஏற்றுக் கொள்ளவில்லை.ஒரு கட்சி தேர்தலைப் பகிஷ்கரிக்கப் போவதாகக் கூறியது. அப்படிப்பட்டதோர் பின்னணியில் சுயாதீன குழுவானது ஒரு கட்டத்துக்கு மேல் முன்நகர முடியவில்லை. அது தனது அவதானிப்புகளையும் அனுபவங்களையும் ஓர் அறிக்கையாக வெளியிட்டதோடு தன் செயற்பாடுகளை நிறுத்திக் கொண்டது.

எனினும் ஒரு பொதுத் தமிழ் வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்ற விடயத்தைப் பொறுத்தவரையிலும் அதை ஒப்பீட்டுளவில் செயல் பூர்வமாக முன்னெடுத்த ஒரு கட்டமைப்பு என்று பார்த்தால் அது மேற்சொன்ன சுயாதீனக்குழு தான்.

சிவாஜிலிங்கம் குமார் பொன்னம்பலம் போன்றவர்கள் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் வேட்பாளர்களாகக் களமிறங்கியிருக்கிறார்கள் தான். ஆனால் அவர்கள் பொது வேட்பாளர்கள் அல்ல. அவர்களை ஒரு பொதுக் கட்டமைப்பு முன் நிறுத்தவும் இல்லை. ஆனால் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது தமிழ் மக்கள் பேரவையால் உருவாக்கப்பட்ட சுயாதீனக் குழுவானது பெரும்பாலான தமிழ்த் தேசியக் கட்சிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு பொது வேட்பாளரை நிறுத்த முயற்சித்தது. ஆனால் முடியவில்லை.

அச்சுயாதீனக்குழு தொடங்கிய வேலையைத் தான் அண்மை மாதங்களாக குடிமக்கள் சமூகங்களும் சில கட்சிகளும் சில செயற்பாட்டாளர்களும் இணைந்து முன்னெடுத்து வருகிறார்கள். அந்த முயற்சியின் ஒரு கட்டமாக முதலில் சிவில் சமூகங்கள் தங்களுக்கு இடையே ஒரு கூட்டிணைவை ஏற் படுத்தின.

அடுத்த கட்டமாக அவை தம்மை ஒரு மக்கள் அமைப்பாக பிரகடனப் படுத்தின. அடுத்த கட்டமாக அந்த மக்கள் அமைப்பானது கட்சிகளோடு ஒரு பொது உடன்பாட்டுக்கு வந்திருக்கின்றது. அந்த உடன்பாட்டின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட பொதுக் கட்டமைப்புக்கு இப் பொழுது தமிழ்த் தேசியப் பேரவை என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

மிகக் குறுகிய காலத்துக்குள் தமிழ் அரசியலில் மூன்று பெயர்கள் கிடைத்திருக்கின்றன. ஆனால் இம் மூன்று பெயர்களும் ஒரு விடயத்தைத் தெளிவாகக் காட்டுகின்றன. ஒரு பொதுத் தமிழ் வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கும் மக்கள் அமைப்புகள்இ தொடர்ச்சியாகவும் கட்டமைப்பு சார்ந்தும் திட சங்கற்பத்தோடும் முன்னேறி வருகின்றன என்பது தான் அது.

அவ்வாறு புதிய புதிய கட்டமைப்புகளை உருவாக்குவது என்பது மக்கள் அமைப்புக்கள் தீவிரமாகஇ விசுவாசமாக வினை புரிகின்றன என்பதனைத் தான் காட்டுகின்றது. ஒரு கட்டமைப்பிலிருந்து மற்றொரு கட்டமைப்பு பிறப்பது என்பது ஓர் அரசியல் கூர்ப்பைக் காட்டுகின்றது. கட்டமைப்புக் கூர்ப்பைக் காட்டுகின்றது.

தமிழ்ப் பொது வாழ்வில் குறிப்பாக அரசியலில் கட்டமைப்பு சார்ந்து சிந்திக்கப்படுவது குறைவு என்ற விமர்சனம் உண்டு. அருவமாக சிந்திப்பது கற்பனையில் திழைப்பது இலட்சிய வாதமாகக் கதைப்பது போன்ற வற்றுக்கும் அப்பால் கட்டமைப்பு சார்ந்து செயல்படும் பண்பு மிகப் பலவீனமாகவே உள்ளது. கட்டமைப்புகளை உருவாக்கினால் தான் வேலை முன் நகரத் தொடங்கும். எல்லாவற்றிக்கும் ஒரு கட்டமைப்பு சார்ந்த திட்டமிடல் இருக்க வேண்டும்.

ஒரு தமிழர் தனக்கு ஒரு வீட்டைக் கட்ட முற்பட்டால்இ முதலில் அவர் வாஸ்து சாஸ்திரம் பார்க்கும் ஒருவரிடம் போவார். அவருடைய ஆலோசனைப்படி வீட்டை எங்கே கட்ட வேண்டும்? எப்படி அறைகளை அமைக்க வேண்டும்? போன்ற விடயங்களைத் தெரிந்து கொள்வார். அதன்பின் அவர் எங்கே போக வேண்டும்? ஒரு கட்டிடப்படக் கலைஞரிடம் போக வேண்டும். ஆனால் பெரும்பாலானவர்கள் அவ்வாறு கட்டிடப்பட கலைஞர்களிடம் போவது கிடையாது. அதற்குச் செலவு அதிகமாக இருக்கும் என்பதும் ஒரு காரணம்.

ஆனால் அதற்குரிய துறை சார் ஞானம் கட்டிடப்பட கலைஞரிடம் தான் இருக்கும். ஒரு வீட்டைக் கட்ட விரும்பும் நபர் எதைக் கற்பனை செய்கின்றாரோ அல்லது எதை மனதில் படமாக வரைந்து வைத்திருக்கின்றாரோ அதனை தூலமாகஇ அதற்கான தொழில் நுட்ப மொழியில் வரைவதற்கு துறை சார்ந்த நிபுணத்துவம் தேவை. ஆனால் பெரும்பாலான தமிழ் மக்கள் அவ்வாறான துறை சார்ந்த நிபுணத்துவத்தை அணுகுவதில்லை. செலவு மட்டும் ஒரு காரணம் அல்ல. அது தொடர்பான கட்டமைப்பு சார்ந்த சிந்தனை குறைவு என்பதும் ஒரு காரணம் தான்.

அதன்பின் வீட்டுக்குரிய கட்டுமானத் திட்டத்தை வரையும் பொழுதும் அங்கே துறை சார் நிபுணத்துவம் பெறப்படுவது குறைவு. வீட்டு உரிமையாளரும் மேசனும் இணைந்து திட்டங்களைப் போடுவார்கள். படங்களை வரைவார்கள். அவர்களுடைய (22ம்பக்கம் பார்க்க)

# 13வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

# உறவுகளே! யூலை மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

13 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 13 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் – உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை – நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும். புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் – மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக – எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை – மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக. "தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

22 யூன் 2024 – 28 யூன் 2024 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 13வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சபாபதிப்பிள்ளை வர்ணகுலசிங்கம்

சரவனை மேற்கு வேலணையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சபாபதிப்பிள்ளை வர்ணகுலசிங்கம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 25 யூன் 2024 செவ்வாய்க்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சபாபதிப்பிள்ளை வர்ணகுலசிங்கம் அவர்களை நினைவு கூர்ந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சிதம்பரம் ஸ்கந்தகுமார்

கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் மிஸிசாகா கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சிதம்பரம் ஸ்கந்தகுமார் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 29 யூன் 2024 சனிக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சிதம்பரம் ஸ்கந்தகுமார் அவர்களை நினைவு கூர்ந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 10வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு நடராஜா கார்த்திகேசு

புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 1ம் வட்டாரத்தை வதிவிடமாகவும் பாரிஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நடராஜா கார்த்திகேசு அவர்களது பத்தாவது ஆண்டு நினைவு நாள் 05 யூலை 2024 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லம் பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் நடராஜா கார்த்திகேசு அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 12வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி இராசையா மகேஸ்வரி

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி இராசையா மகேஸ்வரி அவர்களின் 12வது ஆண்டு நினைவு நாள் 29 யூன் 2024 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது நினைவாக அவரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி இராசையா மகேஸ்வரி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு பத்மரூபன் கந்தையா

யாழ்.அல்வாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு பத்மரூபன் கந்தையா அவர்களின் மூன்றாவது ஆண்டு நினைவு நாள் 07 யூலை 2024 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது நினைவாக அவரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு பத்மரூபன் கந்தையா அவர்களை நினைவுகூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சரோஜினிதேவி ஞானசேகர்

சுருவிலைப் பிறப்பிடமாகவும் கனடா ரொறன்ரோவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சரோஜினிதேவி ஞானசேகர் அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாள் 09 யூலை 2024 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரின் குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு, பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி சரோஜினிதேவி ஞானசேகர் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




29 யூன் 2024 சனிக்கிழமை புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி இராசையா மகேஸ்வரி அவர்களது 12வது ஆண்டு நினைவு நாளாகும் அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



29 யூன் 2024 சனிக்கிழமை கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் மிஸிசாகா கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சிதம்பரம் ஸ்கந்தகுமார் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும் அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




30 யூன் 2024 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வாழும் திருமதி அன்னபூரணம் விநாயகமூர்த்தி அவர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



30 யூன் 2024 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வாழும் திருமதி அன்னபூரணம் விநாயகமூர்த்தி அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



30 யூன் 2024 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வாழும் திருமதி அன்னபூரணம் விநாயகமூர்த்தி அவர்கள் செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




01 யூலை 2024 திங்கட்கிழமை புலோலி தெற்கைப் பிறப்பிடமாகவும் கொடிகாமத்தை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பாக்கியம் சின்னையா அவர்களது 35வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



02 யூலை 2024 செவ்வாய்க்கிழமை கனடாவில் வாழும் திரு சாமுவேல் செல்வரத்தினம் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு சாமுவேல் செல்வரத்தினம் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



05 யூலை 2024 வெள்ளிக்கிழமை புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் முதலாம் வட்டாரத்தை வதிவிடமாகவும் பிரான்ஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நடராஜா கார்த்திகேசு அவர்களது பத்தாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




05 யூலை 2024 வெள்ளிக்கிழமை புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் முதலாம் வட்டாரத்தை வதிவிடமாகவும் பிரான்ஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நடராஜா கார்த்திகேசு அவர்களது பத்தாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




AJITH SABARATNAM
INSURANCE & INVESTMENTS INC.
AJITH SABARATNAM President
Cell: 647.401.5800
email: ajithsaba@gmail.com
125 Topflight Dr, 2nd floor
Mississauga ON. L5S 1Y1
Tel: 416.439.2800

Cash Point
PAWN BROKERS
$1000 $20/month
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
Tel : 416-284-7000

உங்கள் அனைத்து விதமான சட்ட ஆலோசனைகளுக்கும் நம்பிக்கையுடன் நாடுங்கள்!
SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION
T: 416-949-0404
F: 416-948-0303
Vivekananthan Sasitharan - Rajabalini Sasitharan
Barristers, Solicitors & Notaries Public
10 Milner Business Court, Suite # 709, Scarborough Ontario, M1B 3C6

நியூ ரங்கனாஸ்
தங்கச்சுரங்கம்
சிங்கப்பூர்,டுபாய் தங்க நகைகளை
கோடைகால சிறப்புத் தள்ளுபடி விலையில்
கொள்வனவு செய்ய அரிய சந்தர்ப்பம்.
Cash for Gold
Pawning & Money Transfer
New Ranganas Jewellery
Markham & Steeles,Yellow Building,6055 Unit C-102
Scarbrough,ON M1X 0A7 - Canada. 647 702 2159

Outstanding Agent for Outstanding Results.
In Your Neighbourhood Full Time Realtor
Raj Nadarajah
Sales Representative
DIR: 416-333-6115
nanohomes@gmail.com
RE/MAX

Amma Pawn Broker
அம்மா தங்கநகை அடைவு மாடம்
உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும்
குறைந்த வட்டி வீதமும் தரும் ஒரே நிறுவனம்
1.5% முதல்
2% வட்டி
(per month)
416-757-0034 · 416-994-3861
105A - 2425 Eglinton Ave, E, Scarborough. ammapawnbroker@gmail.com

VIBRANT HOSPITALITY GROUP
Shankar Nallathamby
905.769.1509 | 1.888.674.7770
vibranthospitalitygroup.com

FUNERAL ARRANGEMENTS
OF YOUR LOVED ONES
Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE
Funeral Director
S. Christeen
416-258-6759

N.K.S
DRAPERY & BLINDS FABRIC
• Custom Made Vertical Blinds • Venetian Blinds • Draperies
• Curtain • Shutters • Roller Blind
Contact: Ketha
416-321-6420
210 Silver star Blvd, Unit # 825, Scarborough, ON M1V 5J9
Email:Info@nksdrapery.com Web:www.nksdrapery.com

MORTGAGE LOAN
ALMOST ALL SERVICES AVAILABLE
J.R.B
UNIVERSAL INC.
Best Rate Mortgage in Town, Bad Credit New Immigrants bankruptcy, 0% Down Payment. 1st, 2nd & 3rd Mortgage upto 100%
Loans, Mortgages, Insurances, RESP Real Estate, Credit Counseling Accounting and Tax Services
R.R.Rajkumar
Call for More Info
647-289-6164

CSC
Credit Solution Centre
Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
Main Branch Scarborough
309-80 Corporate Dr
Scarborough, ON
M1H3G5
Mississauga Branch
45-2355 Derry Road
Mississauga, ON
L5S1V6
creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com
Tel: 416.439.0224
Fax: 416.439.0226

Century 21
Innovative Realty Inc.
Jude GNANENDRAN
Sales Representative
416-827-2347 Direct
jude.gnanendran@century21.ca
www.century21jude.com
2250 Markham Road, Unit 3, Toronto ON M1B 2W4
Office: 416-298-8383 Fax: 416-298-8303

Chapel Ridge
Funeral Home & Cremation Centre
Vilosan Sivatharman, B.Eng
Funeral Director
8911 Woodbine Avenue
Markham, Ontario L3R 5G1
Telephone: (416) 993-0826
Fax: (905) 305-8128
E-mail: vilosan9@hotmail.com

SR Reliance Auto Collision Inc.
Complete Auto Body Repairs & Painting
Rasan
Proprietor
Tel: 416-822-4272
Fax: 647-352-4272
Email: atsrasan@gmail.com
15 Granger Ave. Toronto, ON. M1K 3K9

747 AUTOPARTS
Need Auto Parts? Look No Further!
Markham Rd: 905-471-4447
Markham - Heritage Rd: 905-294-5773
Newmarket - Davis Rd: 905-836-7447
Scarborough - Lawrence Ave: 416-285-4447
Scarborough - Milliken Blvd: 416-335-7747
Ajax - Fuller Road: 905-686-4447
www.747autoparts.com

விழா சிறப்புற வாழ்த்துகிறோம்
Netwyn
www.netwyn.com
Kula Sellathurai
CEO
10 Thornmount Drive
Scarborough, ON M1B 3J4
D: 416.902.9462
O: 416.906.1414
kula@netwyn.com


தமிழீழத்தின் மூத்த தேசப்பற்றாளர் **தமிழேந்தல் ஈழவேந்தன்** நினைவரங்கில்



முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளின்
வாழ்வாதாரத்திற்காகவும், கல்வி மேம்பாட்டிற்காகவும்

உங்கள் அபிமான **ஈழநாடு** பத்திரிகை

13வது ஆண்டாக நடாத்தும்

# ஊட்டும் கரங்கள்





# தமிழும் இசையும்

## இராப்போசன விருந்தும்





## இன்பத் தமிழ்ப் பேச்சு

சிறப்புச் சொற்பொழிவாளர், தமிழ் கூறும்
நல்லுலகின் தன்னிகரற்ற பேச்சாளர்,
சொல்லின் செல்வி, மொழி அரசி, , பேராசிரியை

## பர்வின் சுல்தானா

நட்சத்திரா இசைக்குழுவின் இசையில்
Zee தமிழ் **சரிகமப** புகழ்

## கோபாலகிருஷ்ணன்

கனேடிய தமிழ்ப் பாடகர்களுடன் இணைந்து வழங்கும்

## இன்னிசை மாலை

**யூலை 28, 2024**
ஞாயிற்றுக்கிழமை - 5:30PM

**METROPOLITAN CENTRE**
3840 FINCH AVE EAST
SCRBOROUGH ( FINCH/ KENNEDY)

அன்பளிப்பு

| $150 | $100 | 70 வயதிற்கு மேற்பட்ட முதியோர்க்கு மட்டும் $75 |
|---|---|---|
| VIP | | |

தொடர்புகளுக்கு-
ஈழநாடு பரமேஸ்
416-841-9600
eelanadu1993@gmail.com


அன்பு இல்லக் குழந்தைகளுக்காக
ஈழநாடு பத்திரிகை நடாத்தும் விழா
சிறப்புற வாழ்த்துகின்றேன்.
சாந்தா பஞ்சலிங்கம்
416 200 5470
(முன்னாள் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத் தலைவர்)

காப்புறுதி ஒன்றே!
• Life Insurance
• Critical Illness Insurance
• Disability Insurance
• Mortgage Insurance
• Super Visa Insurance
• RESP, RRSP and TFSA
Arun KULASINGAM 416.357.2847
Life Insurance Agent
kulasingam33@yahoo.ca
iA Financial Group
Assumption Life
Foresters
KABIS

நந்தா உணவகம்
NANTHA CATERS
Sri Lankan & Indian Food
BEST CATERS IN TOWN
Catering, Bakery & Take Out
Brimley & Steeles - 4915 Steeles Ave.E | Warden & Finch - 3268 Finch Ave.E
Kipling & Steeles - 5010 Steeles Ave. |
Call 416 NANTHA 1 - 416 626 8421

TECHSOURCE
Computer, Electronics & Cellphones Liquidator
1260 Kennedy Rd,
Scarborough, ON
416.757.9111
994 Albion Rd
Etobicoke, ON
647.352.2229

INCOME TAX SERVICE
PERSONAL, SMALL BUSINESS, UNINCORPORATED AND INCORPORATED TAXES, TAXES AND ASSOCIATED SERVICES
THANAM KANAGARATNAM
Tax Analyst
416.298.6781
1080 Tabscott Rd, Unit 5
Scarborough, ON M1X 1E7

வீடு வாங்க, விற்க அல்லது அது சம்பந்தமான
விடயங்கள் அறிய இலவச ஆலோசனைகளுக்கு
உங்கள் நண்பன் ஆனந் தர்மலிங்கம்
RE/MAX COMMUNITY
Realty Inc., Brokerage
1265 Morningside Ave, Suite 203
Toronto ON M1B 3V9
Office: 416.287.2222
ANANTH
Tharmalingam
Sales Representative
416.939.9525

AJAX CREMATORIUM & VISITATION CENTRE
CALL: DHARMA, B.Com.
Licenced Funeral Pre-Planner
647-713-6049


TIMES IRON WORKS INC.
Fabricators & Erectors
Times Metals Sales

ஓம் சக்தி

# ஜெயதுர்க்கா தேவஸ்தானம் - மிசிசாகா

## குரோதி வருட மகோற்சவ விஞ்ஞாபனம்

விரவிநின்றொளிரும் வீரமும் துணிவும் மேதினி வாழ்பவர்க் கருளி
பறந்திடு விமானம் பதிந்து பின் இறங்கி பாங்குடன் ஏறிடும் வகையில்
தரைவழி கொண்ட மிசிசாகா பதியில் தான் நிலைத் தெம் மனம் கொள்ளும்
செருக்கழித்தாண்டு சீரருள்புரியும் ஜெயதுர்க்கை அம்பிகைத் தாயே.



**கொடியேற்றம்**
30-06-2024
ஞாயிறு

**மஞ்சம்**
09-07-2024
செவ்வாய்

**சப்பறம்**
12-07-2024
வெள்ளி

**தேர்**
13-07-2024
சனி

**தீர்த்தம்**
14-07-2024
ஞாயிறு

**பூங்காவனம்**
16-07-2024
செவ்வாய்

**அம்பிகை அடியார்களே!**

சகல வளங்களும் ஒருங்கே அமையப்பெற்ற கனடா நன்நாட்டில் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் ஒன்ராரியோ மாநில மிசிசாகா மாநகரில் திருக்கோவில் கொண்டெழுந்தருளி வேண்டுவோர் வேண்டுவதை ஈய்ந்தருளும் ஜெயதுர்க்கா அம்பாளுக்கு மகோற்சவம் நிகழ திருவருள்கூடியுள்ளது. குரோதி வருடம் ஆனித் திங்கள் 17ம் நாள் (30-06-2024) அச்சுவினி நட்சத்திரமும், கிருஸ்ணபக்ஷம் தசமித் திதியும் சித்தயோகம் கூடியுள்ள நன்நாள் ஞாயிறன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆனி மாதம் 31ம் நாள் (14-07-2024) ஞாயிறன்று தீர்த்த உற்சவத்துடன் இனிதே நிகழ ஏற்பாடாகியுள்ளது. அன்பர்கள், அடியார்கள் அனைவரும் பகலும் இரவும் ஆலயத்திற்கு வருகை தந்து திருவிழா வழிபாடுகளில் கலந்து அம்பாள் அருள்பெற்றுப் பேரானந்தப் பெருவாழ்வு வாழ்வீர்களாக.

---

**1808 Drew Road, Mississauga, Ontario L5S 1J6**
Telephone: 905-612-1856 • www.jeyadhurgatemple.ca

# விடை பெற்றார் தமிழினத்தின் தலைமகன்

ஆர்.ராம்

தமிழ் மக்கள் பாரம்பரியமாக வடக்கு, கிழக்கில் வாழ்ந்து வருகின்றார்கள். ஆகவே அவர்கள் உள்ளக சுயநிர்ணயத்துக்கு உரித்துடையவர்கள். அந்த அடிப்படையில் பிரிக்க முடியாத, பிளவுபடாத ஐக்கிய இலங்கைக்குள் சுயநிர்ணய அடிப்படையில் இணைந்த வடக்கு கிழக்கில் சமஷ்டி அடிப்படையில் அதியுச்சமான அளவில் அதிகாரங்கள் பகிரப்பட்டு அவை மீளப்பெறப்படாத வகையில் உறுதி செய்யப்பட வேண்டும்.

இந்தக் கூற்றுக்கள் 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் முடிவுக்குப் பின்னர் உள்நாட்டிலும், சர்வதேசத்திலும் எந்த விதமான விட்டுக் கொடுப்புக்களுக்கும் இடமின்றி மிகமிக உறுதியாக வெளிப்படுத்தப்பட்டவையாக இருக்கின்றன. அந்தக் கூற்றுக்களுக்காக வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் தமது ஆணையை தொடர்ந்தும் அளித்து வந்திருக்கின்றமையையும் கண்கூடாக கணாக்கூடியதாகவும் இருக்கின்றது.

இனமொன்றின் விடுதலைக்காகவுள்ள இறுதியான வாயிற் கதவான இந்தக் கூற்றுக்களுக்குச் சொந்தக்காரர் வேறு யாரும் அல்ல. ஆயதப்போராட்ட மௌனிப்பின் பின்னர் தமிழ் மக்களால் அரசியல் தலைமகனாக ஏற்றுக் கொள்ளப்பட்ட இராஜவரோதயம் சம்பந்தனுடையது தான்.

கடந்த ஜுன் மாதம் 16ஆம் திகதி வீரகேசரி வார வெளியீட்டில் பிரசுரமாகிய விசேட நேர்காணலுக்காக 14ஆம் திகதி மாலை 6.00 மணியளவில் கொழும்பிலுள்ள இல்லத்துக்குச் சென்று நேர்காணலை ஆரம்பித்த போது ஜனாதிபதி ரணில், சஜித், அநுர ஆகிய மூவரும் களமிறங்கினால் யாரை ஆதரிப்பது என்ற தீர்மானத்தினை, எதனடிப்படையில் எடுப்பீர்கள்? என்று வினாவொன்று எழுப்பப்பட்டது.

அந்த வினாவுக்கான பதில் மிகத் துல்லியமாக அமைந்தது. தமிழ் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்காக காணப்படுகின்ற ஒரேயொரு வழி இனப்பிரச்சினைக்கான நிரந்தரமான தீர்வு காணப்படுவது தான் என்பது சம்பந்தனின் தளர்ந்த உடலிலிருந்து வெளியான உறுதியான குரலாக அமைந்திருந்தது. இறுதிவரையில் தன்னுடைய நிலைப்பாட்டில் மாற்றமில்லை என்ற பிரதிபலிப்பும் பட்டவர்த்தனமாகவும் இருந்தது.

குறித்த நேர்காணல் தான் அவருடைய அரசியல் வாழ்க்கையில் வழங்கிய இறுதி நேர்காணலாக இருக்கிறது. ஆனால் அந்த நேர்காணலிலும் அவர் இனப்பிரச்சினைக்கான தீர்வு, தமிழர்களின் அபிலாஷைகள் உறுதி செய்யப்படுவதற்கான அவசியம் மற்றும் முகங் கொடுக்கும் சமகாலப் பிரச்சினைகள் ஆகிய விடயங்களில் தொடர்ச்சியாகக் கொண்டிருந்த உறுதியான நிலைப்பாட்டிலிருந்து பிறழ்வடையவில்லை.

தமிழினத்தின் விடுதலைக்காக கிடைக்கின்ற அனைத்து வாய்ப்புக்களையும் பயன்படுத்த வேண்டும் என்பதில் சம்பந்தன் உறுதியாக இருந்தார். எவருடனான பேச்சுவார்த்தை மேசையையும் தவிர்த்துச் செல்லக்கூடாது என்பதிலும் அவர் கவனமாக இருந்தார்.

அதற்காக திம்பு பேச்சுவார்த்தை முதல் கிடைத்த அனைத்து சந்தர்ப்பங்களையும் அவர் பயன்படுத்தினார். தமிழ்த் தலைவர்கள் பேச்சுக்களுக்காக திறக்கப்பட்ட வாயில்கள் ஊடாக முயற்சித்துப் பார்க்கவில்லை என்ற பழிச்சொல்லுக்கு ஆளாகிவிடக்கூடாது என்பதில் இறுதிவரையில் உறுதியாக அவர் இருந்தார்.

அதனை அவர் தனது நேர்காணலிலும் வெளிப்படுத்தினார். அடுத்த தேர்தலில் ரணிலோ, சஜித்தோ, அநுரவோ யாருடனும் பேசுவதற்கு தயாராகவே இருக்கின்றோம் என்றும் அவர்களின் விஞ்ஞாபனங்களின் அடிப்படையில் தான்



தீர்மானங்கள் எடுப்போம் என்றும் இறுதியாகக் கூறினார்.

கடந்த பெப்ரவரி மாதம் 5ஆம் திகதி தனது 91ஆவது வயதில் காலடி பதித்திருந்த சம்பந்தன், வயதால் மூப்படைந்திருந்தார். அதனால் உடல்நிலையில் தளர்வுகள் காணப்பட்டன. ஆனால் அவருடைய சிந்தனைகள், கருத்துக்கள் மாறவில்லை. நினைவாற்றால் குன்றவில்லை. அவரது, உரையாடல்களில் சிறுசிறு தெளிவின்மைகள் காணப்பட்டாலும், ஆண்டுகள், திகதிகள் மாறுபடாது



வரலாற்று நிகழ்வுகளையும், குறிப்புக்களையும், துன்பங்கள் துயரங்களையும் வெளிப்படுத்தி இனப்பிரச்சினைக்கான தீர்வினை வலியுறுத்தும் தர்க்க ரீதியான பண்பு நிலையில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கவில்லை.

தனிநாடு கோரிய ஆயுதப் போராட்டம் முள்ளிவாய்க்காலில் முடிவுற்ற போது, திக்கற்று நின்ற தமிழினத்துக்கு தமிழ்த் தேசியக் கொள்கையில் நின்று தமிழ்த் தேசிய அரசியலை கட்டுறுதியாக வைத்திருந்ததில் விமர்சனங்களையும் தாண்டி காத்திரமான பங்கு சம்பந்தனின் உடையது. தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளில் பெரும்பாலானவற்றை ஒன்றிணைந்து பேரம் பேசும் தமிழர் கட்டமைப்பை வழி நடத்தியதில் சம்பந்தனுக்கு பெரும் பங்குண்டு. அது பின்னாளில் சிதைவடைவதற்கு பல்வேறு காரணங்களும் இல்லாமலில்லை.

உள்நாட்டு அரசியலில் ஜே.ஆர்.ஜெயவர்த்தன, பிரேமதாச போன்றவர்களுடன் ஊடாட்டங்கள் இருந்தாலும் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்காக சந்திரிகா, மஹிந்த ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க, மைத்திரிபால சிறிசேன, கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்டவர்களுடன் பேச்சுக்களை முன்னெடுத்த தமிழ்த் தலைவராகவும் சம்பந்தன் உள்ளார். தெற்காசியப் பிராந்தியத்தில் தலைமை நாடான இந்தியாவின் பிரதமர் நரேந்திரமோடி முதல் அனைத்து நாடுகளின் தலைவர்களும், அரசியல் பிரமுகர்களும் மதிப்பளித்து செவிசாய்த்த பெருமைக்குரிய தலைவராகவும் சம்பந்தன் திகழ்கின்றார்.

விசேடமாக, இந்தியாவின் முன்னாள் பிரதமர்களான இந்திராகாந்தி, ராஜீவ் காந்தி, வாஜ்பாய், மன்மோகன் சிங் உள்ளிட்டவர்களுடன் சந்திப்புக்களை நடத்திய தமிழ்த் தலைவராகவும் சம்பந்தன் திகழ்வதோடு அவர்களுடன் தொடர்ச்சியான ஊடாட்டங்களையும் பேணி வந்திருந்தார்.

அது மட்டுமன்றி, உலகத்தவர்கள், சர்வதேச இராஜதந்திரிகள் மத்தியிலும் அவர் நன்மதிப்புக்களைப் பெற்றிருந்ததோடு அவர்கள் ஊடாக தமிழ் மக்களுக்கான விடியலைப் பெறுவதற்கும் தீவிரமான முயற்சிகளையும் எடுத்திருக்கத் தவறவில்லை.

பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் டேவிட் கமரூன், அமெரிக்காவின் முன்னாள் செயலாளர் ஜோன் கெரி, ஐ.நா.செயலாளர் பான் கீ மூன், ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் முன்னாள் உயர்ஸ்தானிகர்களான நவநீதம்பிள்ளை, செயிட் அல் ஹூசைன் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடனான அவரது சந்திப்புக்கள் மிக முக்கியமானவை.

தமிழ் மக்களின் தலைமகனாக சம்பந்தன் உள்நாட்டு, வெளிநாட்டுரீதியாக ஆளுமை மிக்கவராக மிளிர்ந்தார், செயற்பட்டார். அந்த உயரத்தை அவர் அடைவதற்கு கடந்துவந்த பாதை மிகவும் நெடியது. கரடுமுரடானது.

ஆம், 1933ஆம் ஆண்டு பெப்ரவரி 5ஆம் திகதி திருகோணமலையில் இராஜவரோதயம் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்த சம்பந்தன் யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரி, மொறட்டுவை புனித செபஸ்தியான் கல்லூரி ஆகியவற்றில் கல்வி கற்றார்.

பின்னர் இலங்கை சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்று சட்டத்தரணியானதோடு லீலாதேவியை திருமணம் முடித்தார். அவரின் இல்லற வாழ்வின் பலனாக சஞ்சீவன், செந்தூரன், கிரிசாந்தினி ஆகிய மூன்று பிள்ளைகள் உள்ளனர்.

சட்டத்தரணியாக மிளிர்ந்த சம்பந்தன் இளவயதிலேயே தமிழினத்தின் விடுதலைக்கான செயற்பாடுகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள ஆரம்பித்தார். சட்டரீதியான போராட்டங்களிலும், ஜனநாயக ரீதியான போராட்டங்களிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

இதன் பலனாக 1956ஆம் ஆண்டு இலங்கைத் தமிழரசுக்கட்சியில் சம்பந்தன் இணைந்து கொண்டார். எனினும் தேர்தல் அரசியலில் பங்கேற்குமாறு 1963இல் தமிழினத்தின் தந்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகம் கேட்டுக்கொண்டார். எனினும் அதனை சம்பந்தன் உடனடியாக ஏற்றுக் கொண்டிருக்கவில்லை. எனினும் இலங்கைத் தமிழரசுக்கட்சி, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய மூன்று தரப்பினரும் இணைந்து 1972இல் ஸ்தாபித்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் 1977இல் தேர்தல் அரசியலுக்குள் சம்பந்தன் பிரவேசித்தார்.

அதன் விளைவாக 1977இல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் திருகோணமலை (20ம் பக்கம் பார்க்க)

# இலங்கை தொடர்பில் இந்திய - சீனா உறவுகள்

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



சீன மக்கள் விடுதலை இராணுவத்தின் கடற்படைக்குச் சொந்தமான ` பீஸ் ஆர்க் என்ற ஆஸ்பத்திரி கப்பல் (Hospital Ship 'Peace Ark') இலங்கை உட்பட மூன்று நாடுகளுக்கு நல்லிணக்கப் பயணம் (2024 ) ஒன்றை மேற்கொண்டு வரவிருக்கிறது.

இந்த கப்பல் விஜயம் செய்யும் நாடுகளின் மக்களுக்கும் சீன நிறுவனங்களில் பணியாற்றுவோருக்கும் அந்த நாடுகளில் வாழ்கின்ற சீனர்களுக்கும் நோய்களைக் கண்டறிந்து இலவச சிகிச்சைகளை வழங்கவிருக்கிறது. கப்பலில் வைத்தே மருத்துவக் குழுக்களினால் இந்த சிகிச்சைகள் அளிக்கப்படும்.

சீன ஆய்வுக் கப்பல்கள் இலங்கைக்கு வருகை தருவதை பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்தியா ஆட்சேபித்ததை தொடர்ந்து வெளிநாட்டு ஆய்வுக் கப்பல்களுக்கு இலங்கை ஒரு வருட தடை விதித்தது. இந்த பின்புலத்தில் இலங்கை செய்தியாளர் ஒருவர் என்னிடம் கிளப்பிய கேள்விகளையும் எனது பதில்களையும் கீழே தருகிறேன்.

கேள்வி: இலங்கைக்கு சீன ஆய்வுக் கப்பல்கள் வருவதை பாதுகாப்பு காரணங்களுக்காக இந்தியா கடுமையாக எதிர்த்தது. அந்த கப்பல்கள் ஆய்வு நோக்கத்துக்காக வருவதை மாத்திரமல்ல துறைமுகங்களுக்கு வருவதையும் கூட இந்தியா விரும்பவில்லை. ஆய்வுப் பணிகளுக்காக இலங்கையின் கடற்பரப்பிற்குள் வெளிநாட்டு கப்பல்கள் வருவதற்கு அரசாங்கம் ஒரு வருட தடையை விதித்தது. இந்த பின்னணியில் இந்தியாவின் பாதுகாப்பு அக்கறைகளை எவ்வாறு நீங்கள் நோக்குகிறீர்கள்? இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு அந்த கப்பல்கள் உண்மையான அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாக நீங்கள் கருதுகிறீர்களா?

பதில்: சீன ஆய்வுக் கப்பல்கள் இலங்கைக்கு அடிக்கடி வருவது தொடர்பில் இந்தியாவின் பாதுகாப்பு அக்கறைகள் குறித்து நீங்கள் கிளப்பிய கேள்விகளுக்கு இந்து சமுத்திர பிராந்தியத்தின் (Indian Ocean Region - IOR ) மூலோபாய இயக்கவிசையின் ( Strategic Dynamics) அடிப்படையிலேயே நாம் பதில்களைக் கண்டறிய வேண்டியிருக்கிறது. அந்த மூலோபாய இயக்கவிசை இந்தோ – பசுபிக் பிராந்தியத்தில் பரந்தளவிலான முரண்நிலைப் பின்னணி ஒன்றும் இருக்கிறது.

பிரதமர் நரேந்திர மோடியின் `பிராந்தியத்தில் உள்ள சகலருக்கும் பாதுகாப்பும் வளர்ச்சியும்' (Security and Growth for All in the Region - SAGAR ) செயற்திட்டத்தை அடுத்து இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் முன்னெப்போதையும் விட கூடுதலான அளவுக்கு நெருக்கமானதாகி விட்டதையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும். மோடியின் மூன்றாவது பதவிக்காலத்தின் போது இந்து சமுத்திர பிராந்தியத்தில் முக்கியமான ஒரு பாத்திரத்தை வகிப்பதற்கு இந்தியா கொண்டிருக்கும் ஆர்வம் சீனாவின் அதிகரித்த சவாலை எதிர்நோக்கும் என்று நாம் எதிர்பார்க்க முடியும். ஜனாதிபதி முய்சுவின் தலைமையிலான மாலைதீவு இதற்கு ஒரு உதாரணம்.

இந்த பின்புலத்தில் உங்கள் கேள்விகளுக்கு பதிலளிக்கலாம். மேற்குலகம் அல்ல சீனாவே செல்வாக்கு மிக்கதாக விளங்கும் புதிய உலக ஒழுங்கு ஒன்றை உருவாக்குவதற்கு ஜனாதிபதி சி ஜின்பிங்கின் கீழான சீனா முயற்சித்துக் கொண்டிருக்கிறது. இந்தியாவும் கூட புதிய உலக ஒழுங்கு ஒன்றிலேயே நாட்டம் காட்டுகிறது. அது சீனாவை மையமாகக் கொண்டதல்ல. மாறாக தெற்கு உலகத்திற்கு (Global South) ஒப்புரவான ஒரு ஒழுங்கு ஆகும். அதனால் உலக நோக்கைப் பொறுத்தவரை சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் சில சங்கமிப்பு இருக்கிறது.

ஆனால் இந்தியாவுடனான எல்லைத் தகராறை தீர்ப்பதில் சீனா காட்டிவரும் தயக்கம் தொடருவதற்கான சாத்தியம் இருக்கிறது. இரு பெரிய நாடுகளுக்கும் இடையிலான இயற்கையான நட்புறவின் வளர்ச்சிக்கு இது இடையூறாக இருக்கும்.

இந்தியாவைப் பொறுத்தவரை அதன் சகல தெற்காசிய அயல்நாடுகளும் மண்டலமும் பாதையும் செயற்திட்டத்தில் (Belt and Road Initiative) சீனாவின் அதிகரித்த பிரசன்னத்தின் கீழ் வருவதை அலட்சியம் செய்யமுடியாது. அதனால் இந்தியாவைச் சூழவுள்ள பிராந்தியத்தில் சீனா அதன் பிரசன்னத்தை பலப்படுத்துவதை புதுடில்லி அதன் பாதுகாப்பு தந்திரோபாயத்தில் முக்கிய கவனத்தில் எடுக்கும்.



எதிர்வரும் மாதங்களில், இந்து சமுத்திரத்தின் பாதுகாப்பைப் பொறுத்தவரை ஒரு முன்னரங்க நாடு என்ற புவிசார் மூலோபாய அமைவிடம் என்ற வகையில் இலங்கை சீனாவினதும் இந்தியாவினதும் விசேட கவனிப்பின் கீழ் வரும்.

கேள்வி:சீன ஆய்வுக் கப்பல்களுக்கு இலங்கை தடை விதித்திருக்கின்ற போதிலும், மாலைதீவு அந்த கப்பல்களை வரவேற்பதற்கு இணங்கியிருக்கிறது. இந்து சமுத்திரத்தில் சீன ஆய்வுக் கப்பல்கள் தொடர்ந்து இருக்கப் போகின்றன என்பதே இதன் அர்த்தம். இது எவ்வாறு இந்தியாவுக்கான பாதுகாப்பு அச்சுறுத்தலைக் குறைக்கும்?

பதில்:இலங்கையினைதைப் போன்றே இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை இயக்கவிசையும் (Foreign policy Dynamics) பிராந்தியத்தையும் நாட்டையும் மையப்படுத்தியதேயாகும். இந்தியா அதன் அயலில் மாலைதீவிலும் இலங்கையிலும் சீனாவின் ஊடுருவல்களை எவ்வாறு கையாளும் என்று ஒப்பிடுவதில் அர்த்தம் இல்லை. உதாரணமாக, இலங்கை இந்தியாவின் கொள்கலன் போக்குவரத்தில் 70சதவீதத்தைக் கையாளுகிறது. மாலைதீவு அவ்வாறில்லை. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வர்த்தக உறவுகள் விரைவாக வளருகின்றன. மாலைதீவின் சீன ஆதரவுத் தோற்றப்பாடும் கூட இந்தியாவுக்கு அனுகூலமான வகையில் திரும்பும் என்று நாம் எதிர்பார்க்கமுடியும்.

கேள்வி: இலங்கையின் துறைமுகங்களுக்கு ஆய்வுக் கப்பல்களை அனுப்புவதன் மூலம் இந்தியாவுக்கு எரிச்சலூட்ட சீனா விரும்புகிறது என்று இலங்கையில் உள்ள அரசியல் தலைவர்கள் கூறுகிறார்கள். இது எந்தளவுக்கு சரியானது?

பதில: சீனாவிடம் பெரும் எண்ணிக்கையில் ஆய்வுக் கப்பல்கள் இருக்கின்றன. கடலினதும் கடல் படுகையினதும் நடத்தைகளையும் கடலின் அடியில் நீரோட்டங்களையும் அந்த கப்பல்கள் ஆய்வு செய்கின்றன. இது மேற்பரப்பு கப்பல்கள் மற்றும் நீர்மூழ்கிகளின் செயற்பாடுகளுக்கு உதவுகிறது.

ஆய்வுக்கப்பல்களின் ராடார்கள் இந்தியாவின் ஏவுகணைப் பரிசோதனைகளையும் கண்காணிக்கின்றன. அத்துடன் இலத்திரனியல் போர்முறைக்கு பயனுடைய தரவுகளையும் திரட்டுகின்றன என்று எண்ணவும் இடமிருக்கிறது. அந்த கப்பல்கள் மீன்பிடித்துறை தொடர்பான தரவுகளையும் இலங்கை உட்பட ஏனைய நாடுகளின் பிரத்தியேக பொருளாதார வலயங்களில் கடலின் அடியிலான கனிம வளங்கள் பற்றிய தரவுகளையும் திரட்டமுடியும். இந்து சமுத்திர சுற்றாடலில் சீன ஆய்வுக் கப்பல்களின் பிரசன்னத்தை இந்தியாவினால் எளிதாக அலட்சியம் செய்து விட முடியாது. மற்றைய நாடுகளின் தேசிய பாதுகாப்புக்கு அந்த கப்பல்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை குறைத்து மதிப்பிட முடியாது.

கேள்வி: உங்கள் பார்வையில் இந்த பிரச்சினைக்கு நீண்டகால அடிப்படையிலான தீர்வு என்னவாக இருக்கும்?


பதில்: இந்தியாவும் அதன் அயல்நாடுகளும் குறிப்பாக இலங்கை மேலும் கூடுதலான சீனக்கப்பல்களின் ஊடுருவல் நடவடிக்கைகளுக்கு முகங் கொடுக்கக்கூடிய சாத்தியம் இருக்கிறது. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அந்த கப்பல்களின் செயற்பாடுகளை உன்னிப்பாக அவதானிப்பது அவற்றைக் கையாளுவதற்கு சிறந்த வழியாகும். இந்திய கடற்படையும் கரையோரக் காவல் படையும் தினமும் 24 மணி நேரமும் அந்த கடமையைச் செய்கின்றன. இலங்கை கடற்படையிடமும் தேவையான தரவுகள் இருக்கின்றன என்று நான் நம்புகிறேன். இவ்வாறாகத்தான் இரு நாடுகளும் சட்டவிரோத ஆட்கடத்தல்கள், போதைப் பொருள் கடத்தல்கள் மற்றும் ஆயுதக் கடத்தர்களை கண்காணித்து கண்டு பிடிக்கின்றன.

ஆனால் அத்தகைய ஊடுருவல்களை அரசியல் ரீதியில் கையாளுவது சற்று சிக்கலானதாக இருக்கிறது. சீனாவைக் கையாளுவதில் இலங்கையின் தலைமைத்துவத்துக்கு இருக்கும் மட்டுப்பாடுகளை இந்திய அரசியல் தலைமைத்துவம் விளங்கிக் கொள்கிறது என்று நானன நம்புகிறேன். இலங்கைக்கு மிகவும் கூடுதல் பணத்தை வழங்கும் நாடாக சீனா விளங்குகிறது. உண்மையில் இது தற்போது நிலவுகின்ற மூலோபாய நிலைவரங்களின் செல்வாக்கிற்கு உட்பட்ட விடயம். இரு சூழ்நிலைகளும் ஒரே மாதிரியானவை இல்லை.

கேள்வி: இந்த பிரச்சினை குறித்து வேறு ஏதாவது கருத்துக்கள்?

பதில்: அண்மைய காலத்தில் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவுகளில் பெரிய முன்னேற்றம் எதுவும் ஏற்படும் என்று என்னால் எதிர்பார்க்க முடியவில்லை. சீனாவை மையமாகக் கொண்ட உலக ஒழுங்கொன்றை உருவாக்குவதில் சீன ஜனாதிபதி சி ஜின்பிங் கொண்டிருக்கும் அளவுகடந்த ஆர்வமும் அதற்கு மேற்குலகம் காட்டும் எதிர்ப்புமே நிலைவரங்களை தீர்மானிக்கும். இந்த பிரச்சினைகள் தொடர்பில் இந்தியா அதன் தேசிய நலன்களுக்கு பொருத்தமான முறையில் நிலைப்பாடுகளையே தொடர்ந்து எடுக்கும்.

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# திருகோணமலையில் அணு உலை?

கடந்த ஜீன் மாதம், சர்வதேச அணு சக்தி முகவர் அமைப்பு, இலங்கையில் அணு உலையை நிறுவுதற்கான ஆரம்பக் கட்ட ஆய்வுகளை பூர்த்தி செய்திருக்கின்றது. குறித்து அமைப்பின் நிபுணர் குழுவானது இலங்கையில் அடையாளம் காணப்பட்ட இடங்களில்



ஆய்வுகளை மேற்கொண்டிருக்கின்றனர். அணு உலைக்கு பொருத்தமான இடங்களாக அடையாளம் காணப்பட்ட இடங்களில் புல்மோட்டையும் ஒன்றாகும்.

அணு உலை அமைக்கும் திட்டம் தொடர்பில், அமைச்சரவை கடந்த ஆண்டு அணு மதியை வழங்கியிருந்தது. பெப்ரவரி, 2023இல், அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்த்தன இந்த தகவலை வெளியிட்டிருந்தார்.

கொழும்பிலிருந்துவெளியாகும் சண்டே டைம்ஸ் பத்திரிகையில் இது தொடர்பில், இலங்கை மண்ணில், அணு உலை அமைக்க வேண்டும் என்னும் மரண ஆசை என்னும் தலைப்பில் கட்டுரையொன்று வெளியாகியிருந்தது. இலங்கையில் நிலவும் எரிசக்தித் தேவையை பூர்த்தி செய்வதற்கான ஒரு யோசனையாகவே அரசாங்கம் இந்த விசப் பரிட்சையில் ஈடுபட்டிருக்கின்றது.

இந்த அணு உலையை நிறுவும் முயற்சியில் ஆரம்பத்தில் ரஷ்யா ஆர்வம் காண்பித்திருந்தது. அணு உலைகளை நிறுவதில் இந்தியாவே முன்னணி நாடாகும் ஆனால் தற்போது, இந்தத் திட்டத்தில், முதலீடு செய்வதில் சீனா ஆர்வம் காண்பிக்கின்றது. முக்கியமாக திருகோணமலையின் இந்த அணு உலையை நிறுவுவதில் சீனா ஆர்வம் காண்பிக்கின்றது. இது தொடர்பில் கலந்துரையாடும் நோக்கில் சீனத் தூதுக் குழுவொன்று வந்து சென்றிருக்கின்றது.

ஆனால் இந்த விடயம் தொடர்பில் கிழக்கு மாகாண அரசியல்வாதிகள் நித்திரை கொள்ளுகின்றனர். அதானி குழுமத்தின் காற்றாலை திட்டத்தினால் சுற்றுச் சூழல் பாதிப்பு ஏற்படுவதாக கூறுவோர், சீன முதலீட்டில் அணு உலை நிறுவது தொடர்பில் அமைதியாக இருக்கின்றனர். எரி சக்தி திட்டங்களிலேயே காற்றாலை திட்டம் தான் ஒப்பீட்டடிப்படையில் மிகவும் பாதிப்பு குறைந்த திட்டமாகும்.

அணு உலை மிகவும் ஆபத்தானது. அணு உலைகள் வெடிக்குமானால் அதன் விளைவுகள் சர்வ நாசமாகும். சோவியத் யூனியனில் 1986இல் நிறுவப்பட்ட செர்னோபில் அணு மின் நிலையத்தின், ஒரு உலை 1997இல் வெடித்தது.

குறித்த சம்பவத்தின் பின்னர், கடந்த முப்பது ஆண்டுகளாக விஞ்ஞானிகள் மேற்கொண்ட ஆய்வுகளின் படி, குறித்த வெடிப்பால் ஏற்பட்ட புகை மண்டலம் 20000 ஆண்டுகளுக்கு வாழக் கூடியதென்று மதிப்பிட்டிருந்தனர். குறித்த வெடிப்பின் போது, 190 மெட்ரிக் டொன் யுரேனியத்தில், 30 விகிதத்திற்கு அதிகமான யுரேனியம் வளிமண்டலத்தின் கலந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த வெடிப்பை தொடர்ந்து, சோவியத் யூனியன் அப்பகுதியிலிருந்து 350000 மக்களை வெளியேற்றியது. அத்தோடு அணு உலையைச் சுற்றி, பாதிப்பை தணிப்பதற்காக, 19 மைல் தொலைவில் தடுப்பரணை அமைத்தது. இந்த வெடிப்பு சம்பவத்தை தொடர்ந்து, ஐக்கிய நாடுகள் சபையின் விஞ்ஞானிகள் குழு, இதனால் ஏற்பட்ட பாதிப்பை மதிப்பீடு செய்திருந்தது. அணு உலை வெடிப்பினால் ஏற்பட்ட கதிர்வீச்சின் காரணமாக, 6000இற்கு மேற்பட்ட குழந்தைகள் தைரோய்ட் புற்றுநோய்க்கு ஆளானதாக அறிக்கையிடப்பட்டிருக்கின்றது.

சோவியத் யூனியனின் உடைவைத் தொடர்ந்து, அணு உலை வெடித்த அப்பகுதி தற்போது உக்ரெயின் நாட்டின் ஒரு பகுதியாக இருக்கின்றது. இதன் பாதிப்பால் அப்பகுதியிலிருந்து 220000 மக்கள் நிரந்தரமாக தங்களின் இருப்பிடத்தை இழந்து போனார்கள். இதன் பாதிப்பால் 4420 சதுர கிலோமீற்றர் விவசாய நிலங்கள் நிரந்தரமாக பயன்படுத்தப்பட முடியாத நிலையை அடைந்தது.

அதே போன்று, உக்ரெயின் மற்றும் பெலரஸ் நாட்டின் காட்டுப்பகுதியில் 6820 சதுர கிலோமீற்றர் நிலப்பகுதி பயன்படுத்த முடியாதளவிற்கு உருக்குலைந்து போனது. அரசியல்ரீதியில், சோவியத் யூனியனின் உடைவை விரைவுபடுத்தியதில் இந்த அணு உலை வெடிப்பும் செல்வாக்குச் செலுத்தியிருந்தது.

ஏனெனில் இந்த அணு உலை வெடிப்பு சம்பவத்தை தொடர்ந்து, உலகளவில் அணுசக்திக்கு எதிரான உலகளாவிய எதிர்ப்பு இயக்கம் தோற்றம் பெற்றது. இந்தப் பேரழிவால் 235 பில்லியன் இழப்பு ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. சோவியத் யூனியனின் ஒரு பகுதியாக இருந்த பெலரஸ் நாடு, அதன் மொத்த நிலப்பகுதியில் 23 சதவிகிதம் மாசுபட்டதை ஆய்வுகளில் கண்டறிந்தது. 1991இல் பெலரஸ் நாடு அதன் மொத்த வரவுசெலவுத் திட்டத்தில் 22 சத விகிதத்தை இந்த பாதிப்பிலிருந்து மீளுவதற்காக செலவிட்டிருந்தது. இந்த பின்புலத்தில் இலங்கை போன்ற ஒரு சிறிய நாட்டிற்கு, அதிக கடன்களால் ஏற்கனவே பொருளாதார ரீதியான வங்குரோத்து நிலையை அடைந்திருக்கும் ஒரு நாட்டிற்கு, அணு உலைகளை பராமரிப்பதற்கான தொழில் நுட்ப அறிவில் மிகவும் பின்தங்கிய நிலையிலிருக்கும் ஒரு நாட்டிற்கு அணு உலைத் திட்டம் எந்தளவு பொருத்தமானதாக இருக்க முடியும்?

இலங்கையில் அணு உலையை நிறுவ வேண்டும் என்னும் யோசனை 2010இல் முன் வைக்கப்பட்டது. அப்போது ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ஷ தென்கொரியாவின் உதவியுடன் அவ்வாறானதொரு அணு உலையை நிறுவும் முயற்சியில் ஆர்வம் காண்பித்திருந்தார். அந்த முயற்சி பின்னர் கைவிடப்பட்டது. இங்கிலாந்தின் Sheffield uallam பல்கலைக்கழகத்தின் பேராசிரியரும், இங்கிலாந்தில் வாழும் இலங்கை தொழில் வல்லுனர்கள் அமைப்பின் தலைவருமான பேராசிரியர் தர்மதாச சுட்டிக்காட்டும் விடயங்கள் கவனத்திற்குரியவை.

அணு சக்தியை பசுமை எரிசக்தியாகவே குறிப்பிடுகின்றனர் ஆனால் அணு சக்தியை ஒரு பசுமைச் சக்தியாக குறிப்பிட முடியாது ஏனெனில், ஆரம்ப நிலையில் அதாவது, சக்தி உருவாக்க தொழிற்பாட்டின் போது மட்டுமே இந்த வாதம் சரியானது. அதன் பின்னர் வெளியேறும் காபன் டை ஒக்சைட், யுரேனிய சுரங்க சுத்திகரிப்பு அத்துடன் அணு உலையை கட்டுவதற்கு நீண்ட காலம் செல்லுதல், மேலும் அணு உலையின் ஆயுள் முடிவில், அதனை செயலிழக்கச் செய்யும் போது, அணு உலையால் ஏற்பட்ட கதிரியக்க கழிவுகளால் ஏற்படும் பாதிப்புக்களை முகாமை செய்வதற்கு ஆயிரக் கணக்கான ஆண்டுகள் தேவை. இந்த அடிப்படையில் அணு சக்தி ஒரு பசுமை எரிசக்தியல்ல.

அணு உலையினால் ஏற்படும் கழிவுகளை அகற்றுவதற்கு, அந்த அணு உலையில் வாழ் நாளுக்கு அப்பாலும் காலம் தேவைப்படும் ஆனால், இலங்கையில் அதற்கான வசதிகள் இல்லை அத்துடன் அதனை எவ்வாறு செய்வது என்றும் இலங்கைக்கு தெரியாது. இதற்கான பயிற்சிபெற்ற வல்லுனர்கள் இலங்கையில் இல்லை. இந்த அடிப்படையில் தர்மதாச குறிப்பிடும் ஒரு விடயம் முக்கியமானது. அதாவது, இவ்வாறான பின்னணியில், அணு உலை நிறுவப்படுமானால், குறிப்பிட்ட முதலீட்டைச் செய்யும் நாட்டிலேயே நீண்ட காலம் தங்கியிருக்க வேண்டிவரும்.

இந்த அணு உலைக்கு பொருத்தமான இடங்களில் ஒன்றாக திருகோணமலை அடையாளப் படுத்தப்பட்டிருப்பதை, வெறுமனே எரிசக்தி உற்பத்தி விவகாரமாக மட்டுமே நோக்க முடியாது. குறிப்பாக இலங்கையின் அணு சக்தியின் மீதான ஈடுபாட்டை, சீனா முழுமையாக விழுங்கிக் கொள்ள முயற்சிக்கின்றது. இது தொடர்பில், அணு சக்தி விவகாரங்களுக்கான சீன பிரதிநிதிகள் குழுவொன்று நிலைமைகளை ஆராய்ந்து வருகின்றது. அரசாங்கம் அனுமதியளித்தால் சீனா நிச்சயம் இந்த முதலீட்டைச் செய்யும். சீனாவை பொறுத்த வரையில் இது பழம் நழுவி பாலில் விழுவதற்கு சமமானது.

வடக்கு கிழக்கில் இந்தியா அதிக முதலீடுகளை மேற்கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது. அதே வேளை, இலங்கைக்கும் இந்தியாவிற்குமான நிலத் தொடர்பை ஏற்படுத்துவது, தொடர்பிலும் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது குறிப்பாக, திருகோணமலைக்கும் தென்னிந்தியாவிற்குமான எண்ணை குழாய் பொருத்தும் திட்டம் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது.

இலங்கையின் வடக்கு கிழக்கின் மீதான இந்தியாவின் ஆர்வங்கள் நியாயமானது அத்துடன் அவசியமானது ஏனெனில் இந்தியா இலங்கையின் உடனடி அயல் நாடு. மேலும் இதற்கான வலுவானதொரு, எக் காலத்திற்குமான இந்திய இலங்கை ஒப்பந்தமும் உள்ளது. திரு


கட்டுரையாளர்:-
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -




கோணமலையின் அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அங்கமாக இருக்கின்றது. இந்த விடயத்தில் இந்தியா எப்போதும் விட்டுக் கொடுப்புச் செய்யவே முடியாது. அவ்வாறு விட்டுக் கொடுத்தால், அது இந்தியாவின் தேசிய பாதுகாப்பை இருளுக்குள் தள்ளிவிடும்.

அதிக கடன் சுமையால் இலங்கை ஏற்கனவே பொருளாதார வங்குரோத்து நிலையை அடைந்திருக்கின்றது. இந்தியாவின் உடனடி உதவியின் மூலமே இலங்கை பெரும் மனித அவலத்திலிருந்து தப்பியது. இவ்வாறானதொரு பின்னணியில் மீண்டும் கடனை பெற்று அணு உலையை எதற்காக நிர்மாணிக்க வேண்டும்? அதில் சீனா ஏன் ஆர்வம் காண்பிக்க வேண்டும்? எரிசக்தித் தேவையை பூர்த்தி செய்வதற்கு பசுமை எரிசக்தித்திட்டங்களே போதுமானது. இந்தியாவின் பசுமை முதலீடுகள் அதற்கான வாய்ப்பை வழங்கியிருக்கின்றன.

உதாரணமாக அணு உலைக் கழிவுகளை அகற்றும் பொறுப்பை சீனா ஏற்குமென்று வைத்துக் கொண்டால், காலப்போக்கில் முழு வடக்கு கிழக்கும் நீண்ட காலத்திற்கு சீனாவின் பிடிக்குள் சென்றுவிடும். காலப் போக்கில், இலங்கை முற்றிலுமாக சீனாவின் பிடிக்குள் சென்று விடும் ஆபத்து நேரலாம்.

வளம் மிக்க பரந்த நிலப்பகுதிகளை கொண்டிருக்கும் அமெரிக்கா, ரஷ்யா, இந்தியா போன்ற நாடுகளால் இவ்வாறான திட்டங்களை வெற்றிகரமாக முகாமை செய்யக் கூடியதாக இருக்கும் ஆனால் இலங்கை போன்ற ஒரு சிறிய நாட்டினால் இது ஒரு போதும் சாத்தியப்படாது. மேலும் இந்த அணு உலையினால் வடக்கு கிழக்கின் விவசாயம், உல்லாசப் பயணத் துறை அனைத்தும் பெரியளவில் பாதிப்படையும்.

இறுதியில் முற்றிலுமாக அனைத்திற்கும் சீனாவில் தங்கியிருக்கும் நிலைமையே ஏற்படும். சீனா மட்டுமல்ல எந்தவொரு நாட்டின் உதவியுடனும் அணு உலை நிறுவும் முயற்சி மேற் கொள்வது பேராபத்தை ஏற்படுத்தலாம். அணு உலைத் திட்டம் முற்றிலும் கைவிடப்படவேண்டும். வடக்கு கிழக்கு பகுதியை முற்றிலும் பசுமை அபிவிருத்தி மையமாக பேணும் வகையிலேயே அரசாங்கம் செயற்பட வேண்டும். இது தொடர்பில் தமிழ் அரசியல்வாதிகள் வாய்திறக்க வேண்டும்.


மே மாதம் முதல் குறுகிய காலத்திற்கு மாதம் இரு முறையாக வெளிவரும் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் அடுத்த அச்சுப் பத்திரிகையை 05 யூலை 2024 வெள்ளிக்கிழமை அனைத்து வர்த்தக நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

பிரதி வெள்ளிக்கிழமை தோறும் eelanadu.ca மின்னிதழ் மூலம் வாசிக்கலாம்

# இழுவிசைக்குள் அகப்பட்டிருக்கும் தமிழ் அரசியல்

கட்டுரையாளர்:-
யாழ்ப்பாணத்தில் இருந்து
- ஜோதிலிங்கம் -

தமிழர் அரசியல் கொழும்பு நலன் சார் அரசியல், புலிசார்பு அரசியல், அபிவிருத்தி அரசியல், செயற்படா அரசியல் என்கின்ற நான்கு இழுவிசைக்குள் சிக்கியுள்ளது. இந்த நான்கு அரசியலும் தவறானவை. கொழும்பு நலன்சார் அரசியலை சுமந்திரன் குழு மேற் கொள்கின்றது. 2009க்கு பின்னர் இதுவே தமிழ் அரசியலின் மையமாக விளங்கியது. ஆனால் கொழும்பு கொஞ்சம் கூட நெகிழ்ந்து கொடுக்கத் தயாராக இருக்கவில்லை. இதனால் தொடர்ச்சியாக தோல்வியே தழுவியது. எதிர்காலத்திலும் நெகிழ்வதற்கான வாய்ப்புகள் இல்லை. எனவே தொடர்ச்சியாக தோல்விகளே கிடைக்கும்.

கொழும்பு நலன்சார் அரசியல் என்பது ஒரு வகையில் இணக்க அரசியலே. இணக்க அரசியல் என்பது பரஸ்பரம் வெற்றியை வேண்டி நிற்கின்றது. ஒரு தரப்புக்கு வெற்றியும் மற்றைய தரப்புக்கு தோல்வியும் கிடைக்குமானால் அது இணக்க அரசியலாக இருக்க மாட்டாது. ஆதிக்க அரசியலாகவே இருக்கும்.

மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தம் இல்லாமல் இலங்கையில் இணக்க அரசியல் சாத்தியம் இல்லை. 13ஆவது திருத்தம் கூட மூன்றாம் தரப்பின் தலையீட்டின் காரணமாகவே இடம் பெற்றது. எனவே தனித்து தென்னிலங்கையுடன் இணக்க அரசியல் நடத்துவதில் எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லை. மறுபக்கத்தில் இவ்வரசியல் தமிழ் அரசியல் நீர்த்துப் போவதற்கே வழி வகுக்கும்.

இரண்டாவது புலிசார் அரசியல். தமிழ் தேசிய மக்கள் முன்னணி இதனை பின்பற்ற முயற்சிக்கின்றது. அவர்கள் தங்களை புலிகள் இயக்கமாகவே கருதிக் கொள்கின்றனர். ஒரு அரசியல் கட்சி ஒரு போதும் விடுதலை இயக்கமாக மாறி விட முடியாது. புலிகளின் அரசியலில் சாதகமான கூறுகளும் பாதகமான கூறுகளும் இருக்கின்றன. விலை போகாமை, அளவு கடந்த தியாகம் என்பன சாதகமான கூறுகள்.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியிடம் இக்கூறுகள் இருப்பது உண்மையே. கொள்கை நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கின்றமையும், நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து தொடர்ச்சியாக அடையாளப் போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கின்றமையும் சாதகமான அம்சங்கள். என்ன தான் விமர்சனங்களை முன்வைத்தாலும் குருந்தூர் மலை, வெடுக்கு நாறி மலை, தையிட்டி விவகாரங்களில் தொடர்ச்சியாக போராட்டங்களை நடத்திக் கொண்டிருப்பது முன்னணியினரே.

ஆனால் முன்னணியினரின் போராட்டங்கள் அடையாளப் போராட்டங்களாக இருக்கின்றனவே தவிர பேரெழுச்சிகளாக இல்லை. கொழும்பு லிப்டன் சுற்று வட்டாரத்தில் இடதுசாரி குழுக்கள் போராட்டங்களை நடத்துவது போல அவர்களின் நிலையும் உள்ளது. பேரெழுச்சிகளை நடத்துவதாயின் தேசமாக திரள வேண்டும். மக்களை தேசமாக திரட்டும் பணியை ஒரு அரசியல் கட்சியினால் மட்டும் ஒரு போதும் மேற்கொண்டு விட முடியாது.

அதற்குப் பல்வேறு தரப்புகளையும் இணைக்க வேண்டும். எழுக தமிழ், பொத்துவில் முதல் பொலிகண்டி வரை போன்ற போராட்டங்கள் பேரெழுச்சிகளாக அமைந்தமைக்கு பல தரப்புகள் இணைந்து தேசமாக திரண்டமையே காரணமாகும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் மேற்கொண்ட அரசியலில் மிகப்பெரிய குறைபாடு தேசமாக திரட்டுவதில் அக்கறை செலுத்தாமையே. இதனால் ஏற்பட்ட விளைவு பெருந் தொகையானோர் தேசப்போராட்டத்திற்கு வெளியே தள்ளி விடப்பட்டனர். இதுவே பிற்காலத்தில் போராட்டத்தின் பின்னடைவுக்கும் காரணமாகியது. உண்மையில் தற்போது தேவையானது 'புலி அரசியல்' அல்ல மாறாக புலிகளிலும் மேம்பட்ட அரசியலே. இந்த உண்மையை முன்னணியினர் புரிந்து கொள்ளத் தயாராக இல்லை. இதனால் வரலாற்றுக் குறைபாடு தொடரும் நிலை ஏற்படுகிறது.

புலி அரசியல் தொடர்பாக கூறப்படும் இன்னொரு குறைபாடு இராஜதந்திர அரசியலின் பற்றாக்குறையாகும். முன்னணி பக்கத்தில் இது நிறையவே உள்ளது. அரசியல் என்பது மூலோபாயத்தை மட்டும் கொண்டதல்ல. தந்திரோபாயங்களையும் உள்ளடக்கியது. தந்திரோபாய அரசியல் என்பது முன்னணியிடம் மருந்துக்குக் கூட கிடையாது. தந்திரோபாயத்தில் முக்கியமானது எதிரியை தனிமைப்படுத்துவது. முன்னணியின் பகிஷ்கரிப்பு தீர்மானம் தந்திரோபாய அரசியலுக்கு முற்றிலும் மாறானது. பொதுவேட்பாளர் பக்கம் முன்னணியும் நின்றிருந்தால் எதிரிகளை நீண்ட தூரம் தள்ளியிருக்க முடியும். எனவே புலியரசியலும் தற்போது பொருத்தமானது அல்ல.

மூன்றாவது அபிவிருத்தி அரசியல். அதனை அரசாங்க சார்பு கட்சிகளான டக்ளஸ் தேவானந்தா, பிள்ளையான் ஆகியோரின் கட்சிகளும் அங்கஜன் இராமநாதன், வியாழேந்திரன் போன்றவர்களும் மேற்கொள்கின்றனர். அரசியல்தீர்வு இல்லாமல் அபிவிருத்தி அரசியலை மேற்கொள்வது எப்போதும் பெருந்தேசியவாத ஆக்கிரமிப்புக்கே வழி வகுக்கும். இங்கே பொருளாதாரத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பது என்பதை விட அரசியல் பொருளாதாரத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதே பொருத்தமாக இருக்கும்.

அரசியல் பொருளாதாரம் என்பது அந்த மக்கள் கூட்டத்தின் அரசியலை பாதுகாக்கின்ற பொருளாதாரமே. எனவே அபிவிருத்தி அரசியல் தமிழ் மக்களுக்கு பெரிதும் உதவப் போவதில்லை. மறுபக்கத்தில் இந்த அபிவிருத்தி அர சியல் பெருந்தேசியவாத ஆக்கிரமிப்புக்கு வழிவகுப்பதோடு தமிழர் தாயகத்தில் தென்னிலங்கைக் கட்சிகளுக்கு கம்பளத்தையும் விரித்து விடுகின்றது. தென்னிலங்கை கட்சிகளை தாயகத்தில் நுழைய விட்டு விட்டு அதனை அகற்றுவது என்பது இலகுவான ஒன்றல்ல.

நான்காவது செயற்படாத அரசியல். பெரும்பாலான தமிழ்க்கட்சிகள் இந்நிலையிலேயே உள்ளன. இத்தரப்பினர் வெறும் கதைகளோடு நிற்பவர்களே தவிர நடைமுறையில் எதுவும் செய்வதில்லை. அரசியலில் 'தலைவர்கள் முன்னே, மக்கள் பின்னே' என்பார்கள். ஆனால் இங்கே மக்கள் முன்னே செல்கின்றனர். தலைவர்கள் பின்னே கூட வருவதில்லை. மக்கள் முன்னெடுக்கின்ற போராட்டங்களிலும் இத்தரப்பினர் பெரியளவிற்கு பங்கேற்பதில்லை. இத்தரப்பினரை செயல்படுநிலைக்கு கொண்டு வர வேண்டியது அவசியமானதாகும்.

தமிழ்ச் சூழலில் நிலவும் இந்த அரசியல் காரணமாக தமிழரசியல் புறநெருக்கடிகளுக்கும் முகங் கொடுக்க முடியவில்லை. ஆக நெருக்கடிகளுக்கும் முகங்கொடுக்க முடியவில்லை. மறுபக்கத்தில் தமிழரசியலுக்கு வரலாறு தந்த வாய்ப்புகளையும் பயன்படுத்த முடியவில்லை. தமிழரசியல் சந்திக்கும் புறநெருக்கடிகளில் முதன்மையானது தினந்தோறும் எதிர்நோக்கும் ஆக்கிரமிப்புகளாகும். நிலப்பறிப்பு, மொழிச் சிதைப்பு, கலாசாரப் புறக்கணிப்பு, பொருளாதார ஆக்கிரமிப்பு என இவ் ஆக்கிரமிப்புகள் தொடர்கின்றன. இந்த ஆக்கிரமிப்புகள் தொடர்பில் தொடர்பில் அரச நிறுவனங்களுக்கிடையே ஒருங்கிணைந்த தன்மை காணப்படுகின்றது. தமிழ் அரசியல் செயற்பாட்டாளர்களில் ஒரு சிலரே இவ் ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டங்களில் பங்கேற்கின்றனர். ஏனைய தரப்புக்கள் பார்வையாளர்களே உள்ளனர். ஒரே நேரத்தில் பல ஆக்கிரமிப்புகள் நிகழும் போது அதற்கு முகம் கொடுக்கும் ஒரு சிலருக்கும் கடினத் தன்மை ஏற்பட்டு விடுகின்றது.

இந்த ஆக்கிரமிப்புக்கு தமிழ் மக்கள் மட்டும் முகம் கொடுக்க முடியாது. அதற்கு சர்வதேச பாதுகாப்பு பொறிமுறை ஒன்று தேவை. ஐ.நா போன்ற சர்வதேச நிறுவனங்கள் மூலம் இத்தகைய பாதுகாப்பு செயல் முறைகளுக்கு ஒழுங்கு செய்யலாம். ஆனால் சர்வதேச மட்டத்தில் இவ்விவகாரத்தை பேசுபொருள் ஆக்காமல் இதனை மேற்கொள்ள முடியாது. இதற்கு ஒருங்கிணைந்த அரசியல் குரல் தேவை. அரசியல் சக்திகள் துண்டு துண்டாக செயற்படும்போது ஒருங்கிணைந்த குரலை கட்டி எழுப்ப முடியாது. நிலப்பறிப்பு கிழக்கில் முற்றுப் பெற்று தற்போது வடக்கு நோக்கி நகரத் தொடங்கியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டமும் வவுனியா வடக்குப் பிரதேசமும் இதன் தற்போதைய இலக்கு இந்தப் பிரதேசங்கள் பறிபோகுமானால் எதிர்காலத்தில் தமிழர் தாயகம் என்று கூறுவதற்கு எதுவும் மிஞ்சாது. புற நெருக்கடிகளில் இரண்டாவது பொருளாதார நெருக்கடியை காரணமாக காட்டி இலங்கை அரசு இன பிரச்சினையை நில விரிப்புக்குள் தள்ள முயற்சிப்பதாகும். பொருளாதார நெருக்கடியின் ஆணிவேர் இனப்பிரச்சினை தான் என்பது அரசிற்கும் தெரியும். சர்வதேச சக்திகளுக்கும் தெரியும். இனப்பிரச்சினை தீர்வுக்கு பெருந் தேசியவாதம் தடையாக இருக்கும் என்பதால் இதனை தவிர்ப்பதற்கு இருதரப்பும் முயற்சிக் கின்றன. தமிழ்ச் சூழலில் ஒருங்கிணைந்த அரசியல் இல்லாமையும் நிலவிரிப்புக்குள் தள்ளுவதை சுலபப்படுத்தி உள்ளது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கை அரசினை அதிக அளவில் பாதுகாப்பது இந்தோ-பசுபிக் மூலோபாயக்காரர்களான அமெரிக்கா தலைமையிலான மேற்குலகமும் இந்தியாவும் தான். ஜப்பான் போன்ற பாரிஸ் அணி நாடுகள் மேற்குலக அணிக்குள் அடங்கும். இலங்கைக்கு நிதி உதவி வழங்கும் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன அதிகளவில் மேற்குலகின் செல்வாக்கின் கீழேயே உள்ளன. தமிழ்ச் சூழலில் ஒருங்கிணைந்த அரசியல் நிலவுமானால் இந்த நிதி நிறுவனங்களுக்கும், இனப் பிரச்சினை தீர்வுக்கு வல்லரசுகளுக்கும் உத்தரவாதம், உதவிகளைச் வழங்காமல் பொருளாதார செய்ய வேண்டாம் என்கின்ற அழுத்தங்களை கொடுக்க முடியும்.

சர்வதேச நாணய நிதியம் மறைமுகமாக இனப்பிரச்சினையை தீர்க்குமாறு அழுத்தம் கொடுக்கின்றது. படையினரின் எண்ணிக்கையை மூன்றிலொன்றாகக் குறைப்பதும் சர்வதேச நாணய நிதியத்தின் இலக்குகளில் ஒன்றாகும். இந்த இலக்கை அடைவதற்கு இனப்பிரச்சினையை தீர்ப்பது அவசியமானதாகும்.




நாட்டில் ஒரு பகுதி மக்களை புறக்கணித்துக் கொண்டு பொருளாதார நெருக்கடியை ஒருபோதும் தீர்க்க முடியாது.

மூன்றாவது படையினரின் கெடுபிடிகளாகும். வெளித்தோற்றத்தில் போரில்லா நிலை தோன்றினாலும் தமிழ் மக்கள் திறந்தவெளி சிறைக்குள்ளேயே தள்ளப்பட்டுள்ளனர். வன்னி பிரதேசங்களில் இக்கெடுபிடிகள் அதிகம். இந்த கெடுபிடிகளினால் புலம்பெயர் தரப்பின் நிதி உதவிகளை கூட பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. முன்னாள் போராளிகள் தொடர் கண்காணிப்புக்குள்ளேயே விடப்பட்டுள்ளனர். முகநூலில் பதிவேற்றியமைக்காக முன்னாள் போராளி ஒருவர் சிறைவாசம் அனுபவிக்கும் நிலையும் உள்ளது.

நான்காவது தென்னிலங்கை கட்சிகளின் படையெடுப்பாகும். ஜே.வி.பி உட்பட்ட போரை முன்னின்று நடத்திய தென்னிலங்கை கட்சிகள் தற்போது தமிழ் பிரதேசங்களில் கூடாரம் அடிக்கத் தொடங்கியுள்ளன. இக்கட்சிகளின் நோக்கம் தமிழ் பிரதேசங்களில் தமிழ்த் தேசிய நீக்கம் செய்யப்பட்ட அரசியலை நிலை நிறுத்துவதே. தமிழ் பிரதேசங்களில் ஒருங்கிணைந்த அரசியல் இல்லாத நிலை பல இடைவெளிகளை உருவாக்குகின்றன. இந்த இடைவெளிக்கூடாக இக்கட்சிகள் நுழையப் பார்க்கின்றன.

ஜே.வி.பி தமிழ் மக்களின் உணர்வுபூர்வமான விடயங்களில் மிகவும் மோசமாக நடந்து கொண்ட கட்சியாகும். வடக்கு கிழக்கைப் பிரித்து தமிழ் மக்களின் கூட்டிருப்பை, கூட்டுரிமையை, கூட்டடையாளத்தை இல்லாமல் செய்தது. சுனாமி பொதுக் கட்டமைப்பை அகற்றியதன் மூலம் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் வயிற்றிலடித்தது. இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட சிங்கள இளைஞர்களை இராணுவத்தில் சேர்த்து தமிழ் மக்கள் பலரைக் கொன்று குவித்தது. இத்தகைய கொடிய செயல்களுக்கு பொறுப்பு கூறவோ, தமிழ் மக்களிடம் மன்னிப்பு கேட்கவோ இன்னமும் அது தயாராக இல்லை. அது எந்த முகத்துடன் தமிழ் மக்களிடம் வருகின்றது என்பது அதற்குத்தான் வெளிச்சம்.

ஐந்தாவது அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊடுருவல்களாகும். தமிழ் மக்களை மூளைச் சலவை செய்வதற்கென்றே இவை களமிறக்கப்பட்டுள்ளன. புதிதாக சிந்திப்போம் என்ற வார்த்தை பிரயோகங்களை மேடை ஏற்ற பார்க்கின்றன. குறிப்பாக இளைஞர்களிடையே பணத்தையும் இவை அள்ளி வீசுகின்றன. ஆடம்பர விடுதிகளில் ஏழை இளைஞர்களை அழைத்து(22ம்பக்கம் பார்க்க)

# பத்தாவது ஆண்டு நினைவஞ்சலி



## புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும்
## புங்குடுதீவு 1ம் வட்டாரத்தைப் வதிவிடமாகவும்
## பிரான்ஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த

# அமரர் திரு நடராஜா கார்த்திகேசு

காலங்கள் கடந்து பத்து ஆண்டுகள் சென்றாலும்
எங்கள் மனதில் என்றும் நிலைத்திருப்பீர்கள்!
அன்பின் அடையாளமாக! அறத்தின் புதல்வனாக!
தர்மத்தின் தலைவனாக! அன்பில் சிவமாக!
என்றும் எங்களில் வாழும் அப்பா!
நீங்கள் இருக்கும் போது
உங்கள் அருமை தெரியவில்லை!
இல்லாத போது வெறுமை மறையாது
நீங்கள் சொன்ன வார்த்தைகள் எல்லாம்
எங்களோடு இருக்க நீங்கள் மட்டும்
போனது ஏனப்பா?
வாழ்க்கையின் வழிகாட்டியே1- உங்கள்
அன்பு முகம் தான் நிழலாடுகின்றது!
அலை கடல் வற்றினாலும் ஆகாயம் சுருங்கினாலும்
எங்கள் இதயத்தில் ஓர் மூலையில்
ஓர் குரல் மீண்டும் ஒலிக்கிறது
அனைத்து உறவுகளும் ஏதோ
ஒரு சூழ்நிலையில் கசந்து போகும்.
ஆனால் எப்போதும் கசந்து போகாத உறவு
நீங்கள் தான் அப்பா!
கோபத்திலும் அன்பைப் பொழிந்தீர்கள்!
வாழ்க்கையை கண்டிப்புடன் நடத்தினீர்கள்
அன்பு அப்பாவே! ஆண்டுகள் பத்து ஆனாதப்பா
அப்பா என்று அழைக்க - நீங்கள்
இல்லாதத் துயரம் இதயத்தை வாட்டுகிறது
பாசமாய் எங்களை வளர்த்த அப்பாவே!
பார்க்கும் இடமெல்லாம்
எங்கள் பார்வைக்குள் தெரிகின்றீர்கள்
ஒவ்வொரு நொடியும் இதயத்தின்
துடிப்பைப் போல் அருகில் - நீங்கள்
வாழ்வதைப் போன்று உணருகின்றோம்
எக்கணமும் உங்கள் நினைவாக வாழும்

**என்றும் உங்களுக்காக அன்பு**
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

# விடை பெற்றார் தமிழினத்தின் தலைமகன்

(15ம் பக்கத் தொடர்ச்சி) மாவட்டத்திலிருந்து வெற்றி பெற்று முதன்முதலாக பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டார். அக்காலத்தில் இருந்த தமிழினத் தளபதி அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் போன்றவர்களுடன் கூட்டிணைந்து தாக்கம் செலுத்தும் அரசியல் செயற்பாடுகளில் பங்கேற்றார்.

1977 முதல் 1983 வரை பாராளுமன்ற உறுப்பினராக இருந்த சம்பந்தன், 1989, 1994, 2000 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தல்களில் வெற்றி பெற்றிருக்கவில்லை. பின்னர் 2001ஆம் ஆண்டில் தமிழர் விடுதலைக்கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ரெலோ ஆகிய கட்சிகள் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப் பு என்ற புதிய கூட்டணியை தமிழீழ விடுதலைப்புலிகள் ஸ்தாபித்தனர்.

இக்கூட்டணிக்கு சம்பந்தன் தலைமைப் பொறுப்பை ஏற்றார். அக்கட்சி தேர்தல் சட்டத்தில் அங்கீகரிக்கப்படாதபடியால் கூட்டமைப்பு தமிழர் விடுதலைக் கூட்டணியின் பெயரில் 2001ஆம் ஆண்டுத் தேர்தலில் போட்டியிட்டது. சம்பந்தன் திருகோணமலைத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இதன் காரணமாக 18 ஆண்டுகளின் பின்னர் சம்பந்தன் பாராளுமன்றத்திற்கு மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

எனினும் 2004ஆம் ஆண்டு தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பெயருடன் போட்டியிடுவதற்கு ஆனந்தசங்கரி அனுமதிக்கவில்லை. இதனால் சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சின்னத்தில் போட்டியிட்டனர். சம்பந்தன் தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளராக, துணைத்தலைவராக, பொருளாளராகவும் பதவி வகித்ததோடு தமிழரசுக் கட்சியின் தலைவராகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராகவும் செயற்பட்டுள்ளார்.



பின்னர் அவர் 2004, 2010, 2015, 2020 எனத் தொடர்ச்சியாக பாராளுமன்றத்திற்கு திருகோணமலை தமிழ் மக்களின் ஆணையுடன் தெரிவு செய்யப்பட்டு வந்தார். 2015 செப்டெம்பர் 3ஆம் திகதி முதல் 2018 டிசம்பர் 18 வரை இவர் இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவராகப் பதவி வகித்தார்.

இந்தப் பதவி நிலையே சம்பந்தன் தனது அரசியல் வாழ்வில் வகித்த அதியுச்சமான பதவி நிலை என்பது குறிப்பிடத்தக்கதாக இருப்பதோடு, தற்போதும் தமிழ் மக்களின் பெருந்தலைவர் என்ற உயரிய அந்தஸ்து சம்பந்தனுக்கே உரியதாகிறது.

தனது வாழ்நாள் முழுவதையும் தமிழ் அரசியலுக்காகவும், இன விடுதலைக்காகவும் அர்ப்பணித்த தலைவராக இருக்கும் சம்பந்தனின் இழப்பு விமர்சனங்களுக்கு அப்பால் தமிழ்த் தேசிய அரசியலுக்கும், தமிழினத்துக்கும் நிரப்ப முடியாத பெருவெற்றிடம் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.






# தென்னிலங்கை அரசியலும் இந்திய எதிர்ப்பு வாதமும்

இந்திய வெளிவிவகார அமைச்சரது இலங்கை விஜயம் அதிக அதிர்வலைகளை தென் இலங்கையிலும் வடக்கு, கிழக்கிலும் ஏற்படுத்தியுள்ளது. ஆனால் ஒப்பீட்டடிப்படையில் அவருடனான தமிழ்த் தேசியக் கட்சிகளது சந்திப்பு தமிழர் அரசியலை முன்னோக்கி நகர்த்துவதாக தெரிகிறது.

அதில் வழமையான முரண்பாடுகளும் கட்சிக்குள் நிலவும் குத்துவெட்டுகளும் தெறிப்படைந்தாலும் ஆரோக்கியமான நகர்வும் தென்படுகிறது. இந்தியாவுக்கு புதிய செய்தியொன்று வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அரசியல் நிகழ்ச்சி நிரலையும் (1987 உடன்படிக்கை) சட்ட விடயத்தையும் (13 ஆவது திருத்தம்) ஒன்று சேர அமுல்படுத்த வேண்டிய பொறுப்புக்குள் இந்தியா தள்ளப்பட்டதென்பது உரையாடலில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக விளக்கம் தந்த இந்திய கொள்கை வகுப்பாளருக்கு முதல் தடவையாக தமிழர் தரப்பின் நிலைப்பாடு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ் மக்கள் பொது வேட்பாளரை முதன்மைப்படுத்துகிறார்கள் என்பதுவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவை இரண்டுமே சந்திப்பின் தனித்துவமான விடயங்கள்.

ஆனால் அமைச்சர் ஜெய்சங்கரின் விஜயத்தின் நிறைவுக்குப் பின்னர் ஆண்டகை மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ள கருத்தே கவனத்தில் கொள்ள வேண்டியதாகும். இக்கட்டுரை அத்தகைய கருத்து நிலைப்பாடு சார்ந்து தெளிவைப் பெற முயல்கிறது.

குறிப்பாக இந்திய வெளியுறவு அமைச்சர் தனது விஜயத்தின் நிறைவில் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் பக்கத்தில் இந்தியா எதிர் காலத்திலும் இலங்கையின் நம்பிக்கையான நண்பனாக செயல்படும் எனத் தெரிவித்திருந்தார். இலங்கைக்கான பொருளாதார நெருக்கடியின் போது அதிக உதவிகளை வழங்கிய இந்தியா, அயல் நாடுகளுக்கு முதலிடம் என்ற கொள்கையின் பிரகாரம் செயல்பட்டு வருகிறது. அதில் ஏனைய தென்னாசிய நாடுகளை விட தென் இலங்கையுடன் அதிக நெருக்கமாக செயல்பட்டு வருகிறது. இந்தியா அதிக விட்டுக்கொடுப்புகளை மேற்கொண்டு வருவதாக இலங்கைத் தமிழர்கள் தொடர்ச்சியாக குற்றம் சாட்டி வருகின்ற நிலையிலேயே மீளவும் அத்தகைய நகர்வொன்றை இந்திய வெளியுறவு அமைச்சரின் இலங்கை வருகை அமைந்திருந்தது.

ஆனால் அவரது விஜயம் நிறைவுற்ற காலப் பகுதியிலேயே ஆண்டகை மல்கம் ரஞ்சித் இந்தியாவுக்கு எதிரான உணர்வுகளை வெளிப்படுத்தியுள்ளார். அவர் மட்டுமல்ல தீவிர அரசியலை வெளிப்படுத்தும் தென் இலங்கை அரசியல்வாதிகளும் இந்தியா பொறுத்து அத்தகைய குற்றச்சாட்டுகளை தெரிவித்து வருகின்றனர். அதாவது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பாலம் அமைக் கப்பட்டால் அது இலங்கையின் இறைமையையும் சுதந்திரத்தையும் இல்லாமல் செய்து விடும் எனக் குறிப்பிட்ட மல்கம் ரஞ்சித் ஆண்டகை, இலங்கைத் தீவின் வரலாறு தென் இந்தியாவிலிருந்து வருகைதரும் படையெடுப்பாளர்களினால் காலத்திற்குக் காலம் இலங்கையைக் கைப்பற்றி ஆட்சி செய்துள்ளதாகவே விளங்கியது. இலங்கை மன்னர்களும் அதன் படைகளும் அவர்களுடன் போரிட்டு நிலத்தை விடுதலை செய் துள்ளனர். இந்நிலையில் இலங்கை அரசாங்கம் தனது அதிகாரத்தின் கீழ் திட்டமிட்டுள்ள தமிழகத்திற்கும் இலங்கைக்குமான நிலத் தொடர்ச்சிக்கான பாலம்



அமைப்பதானது. தமிழ்நாட்டுடனான அலகாக இலங்கை அமைவ தற்கான நடவடிக்கையாகவே உள்ளது. இது முற்றாகவே இலங்கையின் இறையாண்மையையும் சுதந்திரத்தையும் இல்லாமல் செய்து விடும் எனக் குறிப்பிட்டுள்ளார். இதுவே ஈழத்தமிழரது அரசியல் துயரத்திற்கான அடிப்படையாகும். இந்தியா அதிலும் தமிழகம் புவிசார் அரசியல் ரீதியில் தமிழர் வாழும் பிரதேசத்திற்கு அண்மையில் அமைந்திருப்பதனால் தென் இலங்கையர்கள் அச்சமடைகிறார்கள். இந்தியப் படையெடுப்புகளுக்கு ஈழத்தமிழர் காரணம் என்றும் ஈழத்தமிழர் உதவியுடனேயே இந்தியப் படையெடுப்புகள் இலங் கைத் தீவில் வரலாற்றுக் காலம் முதல் நிகழ்வதாகவும் கருதுகிறார்கள்.

அதனையே மல்கம் ரஞ்சித் சுட்டிக்காட்டுகின்றார். இத்தகைய அச்சம் வரலாற்றுக் காலத்தில் மட்டுமல்ல தற்போதும் உள்ளது. அத்தகைய அச்சமே அவர்கள் ஈழத் தமிழர்களை படுகொலை செய்யவும் ஈழத்தமிழர் பிரதேசங்களில் குடியேற்றங்களை நிகழ்த்தவும் ஆக்கிரமிப்புகளை மேற்கொள்ளவும் வழிவகுத்தது. ஈழத்தமிழர் வரலாற்றுக் காலம் முதல் எதிர்கொள்ளும் அனைத்து அழிவுகளுக்கும் இந்தியாவும் தமிழ்நாடுமே காரணமாகும். இன்னோர் வகையில் கூறுவதானால் இந்தியாவுக்காக ஈழத்தமிழர் படுகொலைகளுக்கும் அழிப்புகளுக்கும் உள்ளாகின்றனர்.

1918–1920களில் சேர் பொன். இராமநாதன் எதிர்காலத்தில் இந்தியாவின் ஒரு மாகாணமாக இலங்கை அமைவது சிறப்பானது என்று குறிப்பிட்டார். அதனை பிரித்தானிய குடியேற்ற ஆட்சியாளர்கள் விரும்பாமையினால் தமது பிரித்தாளும் கொள்கையை முன் வைத்து அத்தகைய முயற்சியை தோற்கடித்தார்கள். இதே அணுகுமுறை 1940களில் மீள நிகழ்ந்தது. 1940 ஜீலை 20 ஆம் திகதி இலங்கை தேசியகாங்கிரஸ் சார்பில் ஜே.ஆர்.ஜெயவர்தன. இந்தியத் தலைவர் ஜவஹர்லால் நேருவுக்கு சுதந்திர இந்தியாவுடன் சுதந்திர இலங்கை ஒரு சமஷ்டி ஆட்சி முறையையோ அல்லது நெருக்கமான கூட்டாட்சி முறையையோ அமைப்பது பற்றி உங்களுடன் நாங்கள் கலந்துரையாட விரும்புகிறோம் எனக் கடிதம் ஒன்றை எழுதியிருந்தார்.

இதே கருத்தை டி.எஸ். சேனநாயக்க டைம்ஸ் ஒப் இந்தியாவுக்கு அளித்த நேர்காணலில் பெரிய பலம் பொருந்திய இந்தியா சமஷ்டி அமைப்புக்குள் ஓர் அங்கமாக இலங்கை இணைவது இலங்கையின் நலனுக்கு உகந்தது என்றார். இதனையும் மீளவும் பிரித்தானியர் கையாண்டு முடிவுக்கு கொண்டு வந்தனர். அதில் டி.எஸ். சேனநாயக்கவின் ஆலோசகரான ஐவர் ஜென்னிங் முக்கியமானவராக விளங்குகிறார். இதனை அடுத்து ஏற்பட்ட இலங்கை ஆட்சி முறையானது. பிரித்தானியருடன் நெருக்கமான உறவை பேரம் பேசல் மூலம் வலுப்படுத்திக் கொண்டு இந்திய எதிர்ப்பு வாதத்தை முதன்மைப்படுத்த ஆரம்பித்தது. பிரித்தானிய–இந்திய உறவில் காணப்பட்ட விரிசல் இலங்கை–பிரித்தானிய நட்புறவில் தங்கியிருந்தது. இதன் நீட்சியே இலங்கை–இந்திய நிலத் தொடர்ச்சிக்கான நடவடிக்கை மீதான எதிர்ப்புவாதமாகும். இலங்கை இந்தியாவுக்கிடையிலான இராமர் பாலம் என்பதற்குப் பதிலாக தமிழ்நாடு–இலங்கை பாலம் என்பதாக உரையாடப்படுகிறது. இது விரைவில் ஈழத் தமிழர்–தமிழக உறவுக்கான பாலம் என்று உரையாடப்படும். புவியியல் அமைவிடம் அதனை தென் இலங்கை பலப்படுத்த அதிக வாய்ப்பினை கொடுத்துள்ளது. இதனை ஆழமாக நோக்குவது அவசியமானது.

ஒன்று. இலங்கையையும் இந்தியாவையும் பிரிக்கும் பாக்குநீரிணையே

கட்டுரையாளர்:
இலங்கையில் இருந்து
பேராசிரியர்
– K.T.கணேசலிங்கம் –



இலங்கையை தீவாகவும் ஓரசாகவும் பேணுவதற்கு வழி வகுத்துள்ளது. பாக்கு நீரிணையில்லையேல் இலங்கையின் அரசியல் இருப்பு கேள்விக்குரியதே. அதன் அடிப்படையில் உருவானதே இலங்கை–இந்திய அரசியல் உறவு. அது தனித்து தென் இலங்கையின் அரசியலை மட்டுமல்ல வடக்கு, கிழக்கின் அரசியல் இருப்பையும் சார்ந்தது. வெளிப்படையாக நோக்குவோமாயின் பாக்குநீரிணையே ஈழத்தமிழரது ஆயுதப் போராட்டத்திற்கும் தனித்துவமான அரசியல் இருப்புக்கும் மூலாதாரமானது.

அதுவே ஈழத்தமிழரது இந்திய–தமிழ்நாட்டுடனான உறவுக்கும் வலுவான காரணியாகும். இத்தகைய கேந்திர முக்கியத்துவம் பொருந்திய கடற்பகுதியையே வல்லரசு நாடுகளும் தென் இலங்கையும் தமது கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள முனைகின்றன. இந்தியாவுக்கு எதிரான சக்திகளின் முனைப்பான அரசியல் பாக்கு நீரிணை சார்ந்ததாகவே காணப்படுகிறது. இதனை முறியடிக்கும் விதத்திலேயே இராமர் பாலம் அரசியல் முக்கியத்துவத்தைக் கொடுக்கின்றது. தரை வழி நீட்சி தனித்து இலங்கைத் தீவுடனான உறவை மட்டுமல்லாது (22ம் பக்கம் பார்க்க)



# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?

மேடராசி அன்பர்களே! முடங்கிக் கிடந்த காரியங்கள் அனைத்தும் வேகம் பிடிக்கும். நெருக்கடியான நேரத்தில் உறவினர்கள், நண்பர்கள் கை கொடுப்பார்கள். மனதில் இருந்து வந்த சஞ்சல நிலை மாறும். தருமசிந்தனை உண்டாகும். தொழில் வியாபாரம் சீராக நடக்கும். பழைய பாக்கிகள் வசூல் செய்வதில் வேகம் இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கலாம்.

ரிஷபராசி அன்பர்களே! எந்த ஒரு காரியத்திலும் சரியான முடிவுக்கு வர முடியாமல் இருந்த தடுமாற்றம் நீங்கும். சாமர்த்தியமாக எதையும் சமாளிக்கும் துணிச்சல் வரும். பணவரத்து திருப்தி தரும். எதிர்ப்புகள் குறையும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும். எந்த வேலையை முதலில் கவனிப்பது என்று குழப்பம் வரும். மேலிடத்துடன் இருந்து வந்த கருத்து மோதல்கள் நீங்கும்.

மிதுனராசி அன்பர்களே! மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். எந்த ஒரு காரியமும் சாதகமாக முடியும். விருப்பமானவர்களுடன் சந்திப்பு ஏற்படும். வாக்கு வன்மையால் நன்மையை தரும். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். தொழில் வியாபாரம் திட்டமிட்டபடி சிறப்பாக நடக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு வேலைப் பளு, வீண் அலைச்சல் குறையும். அதிகாரம் அந்தஸ்து கிடைக்கும்.

கடகராசி அன்பர்களே! வீண் வாக்குவாதம் ஏற்படும். மற்றவர்களிடம் அனுசரித்து செல்வது நன்மை தரும். பயணம் மூலம் சாதகமான பலன் கிடைக்கும். கடித போக்குவரத்து நன்மை தரும். பழைய வீட்டை புதுப்பிப்பதற்கு வாய்ப்புகள் ஏற்படும். தொழில் வியாபாரம் தொடர்பான நெருக்கடிகளை சந்திக்க வேண்டி வரும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் சுமையாக வரும். சாமர்த்தியமாக பழகி அனுகூலம் அடைவீர்கள்.

சிம்மராசி அன்பர்களே! தடைப்பட்டிருந்த பணவரத்து வந்து சேரும். உடல் ஆரோக்கியம் சீராகும். அடுத்தவர் விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கி செல்வது நல்லது. தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் கூடுதல் செலவை சந்திக்க நேரிடும். தேவையான உதவி கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு கூடுதல் பணி காரணமாக உடல் சோர்வு உண்டாகலாம்.

கன்னிராசி அன்பர்களே! பொறுப்புகள் அதிகரிக்கும். வீட்டை விட்டு வெளியே தங்க நேரிடும். தேவையில்லாத வீண் செலவுகள் உண்டாகும். பணவரத்து அதிகரிக்கும். தொழில் வியாபாரம் தொடர்பாக அலைய வேண்டி இருந்தாலும் முடிவில் லாபம் கிடைக்கும். புதிய ஆர்டர்கள் வரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் உழைப்புக்கு ஏற்ற பலனை அடைவார்கள். புதிய வேலை தேடுபவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும்.

துலாம் ராசி அன்பர்களே! தைரியமாக எந்த காரியத்தையும் செய்து முடிப்பீர்கள். சகோதரர்கள் மூலம் நன்மை உண்டாகும். பணவரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். வாகனங்களை ஓட்டிசெல்லும் போது கவனம் தேவை. வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். எந்த காரியத்திலும் விட்டு கொடுத்துச் செல்வது நல்லது. தொழில், வியாபாரம் தொடர்பான விவகாரங்களில் தாமதம் ஏற்படலாம். உத்யோகத்தில் இருப்பவர்கள் இடமாற்றம், பதவி இறக்கம் ஆகியவற்றை சந்திக்க வேண்டி இருக்கும்.

விருச்சிகராசி அன்பர்களே! ஆக்கபூர்வமான யோசனைகள் தோன்றும். மற்றவர்களுடன் கருத்து வேற்றுமை ஏற்படாமல் கவனமாக இருப்பது நல்லது. தொழில் வியாபாரம் நிதானமாக நடக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் வேலையில் கவனமாக இருப்பது நல்லது. வேறு வேலைக்கு முயற்சி செய்பவர்கள் சிறிது காலம் தள்ளிப் போடுவது சிறந்தது. குடும்பத்தில் ஏதாவது பிரச்சனை தலைதூக்கலாம். எல்லோரையும் அனுசரித்து செல்வது நன்மை தரும்.



தனுசுராசி அன்பர்களே! எந்த காரியத்தையும் செய்து முடிப்பதில் தாமதம் ஏற்படும். பகைவர்களால் ஏற்படும் சிறு தொல்லைகளை சமாளிக்க வேண்டி இருக்கும். புதிய நண்பர்களுடன் பழகும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரம் நிதானமாக நடக்கும். கடன் விவகாரங்கள் கட்டுக்குள் இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திக்க வேண்டி இருக்கும். அலுவலக பணிகள் மூலம் பதற்றம் உண்டாகும்.

மகரராசி அன்பர்களே! வீண் செலவுகள் ஏற்படும்.எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் தாமதம் ஏற்படும். கொடுத்த வாக்கை காப்பாற்ற பாடுபட வேண்டி இருக்கும். மற்றவர்களின் பிரச்சனைகளுக்கு வலிய சென்று உதவிகள் செய்வதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரம் முன்னேற்றம் காண மிகவும் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும். பார்ட்னர்களுடன் அனுசரித்து செல்வது நல்லது.

கும்பராசி அன்பர்களே! அதிகம் உழைக்க வேண்டியது அவசியம். தேவையற்ற பயணங்கள் அதன் மூலம் அலைச்சல், உடல் நல சோர்வு ஏற்படலாம். அடுத்தவரை நம்பி எதையும் ஒப்படைப்பதை தவிர்ப்பது நல்லது. சுபசெலவுகள் ஏற்படும். தொழில் வியாபாரம் திட்டமிட்டபடி நடக்கும். பொருட்களை வாடிக்கையாளர்களுக்கு அனுப்புவதில் தாமதம் ஏற்படலாம். போட்டிகள் தலைதூக்கும்.

மீனராசி அன்பர்களே! நிலுவையில் இருந்த பணம் வந்து சேரும். நீண்ட நாட்களாக திட்டமிட்ட வாகனம் சொத்து மற்றும் வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பயணங்கள் சாதகமான பலன் தருவதாக இருக்கும். உடல் ஆரோக்யம் மேம்படும். தெய்வ பக்தி அதிகரிக்கும். தொழில் வியாபாரம் சிறப்பாக நடக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மன மகிழ்ச்சியடைவார்கள்.

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

# தமிழ்த்தேசியப் பேரவை:-

(9ம் பக்கத் தொடர்ச்சி) கற்பனை தான் முடிவில் வீடாக மாறும். இந்த விடயத்தில் அதாவது ஒரு வீட்டைக் கட்டும் விடயத்தில் அதற்குரிய தொழில் சார் நிபுணத்துவத்தை பெறுபவர்கள் மிகக் குறைவு. குறிப்பாக பண வசதி படைத்தவர்கள் தான் அதைச் செய்வது உண்டு. ஆனால் வசதி குறைந்தவர்கள் வாஸ்து விவகாரத்துக்கு மட்டும் ஒரு துறை சார் ஆளைத் தேடி போவார்கள்.மற்றும்படி கட்டிடப்பட கலைஞராகவும் கட்டடத் துறை சார் பொறியியலாளராகவும் எல்லாமுமாகவும் மேசனும் வீட்டுக்காரருமே தொழிற்படுவார்கள். இப்படித் தான் பெரும்பாலான தமிழர்கள் வீடு கட்டுகிறார்கள்.

இதே ஒழுக்கத்தை பொது வாழ்விலும் பல விடயங்களில் காணக்கூடியதாக இருக்கிறது. குறிப்பாக அரசியலில் கட்டமைப்பு சார்ந்து சிந்திக்கின்ற கட்டமைப்புகளுக்கு ஊடாக தொழில் புரிகின்ற போக்கு மிகப் பலவீனமாகவே இருந்து வருகின்றது. இந்த பலவீனமான ஒரு பாரம்பரியத்தின் பின்னணியில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்த முற்படும் தரப்புகள் எல்லாவற்றையும் கட்டமைப்புக்களுக்கூடாகச் சிந்திப்பது என்பது முன்னேற்றகரமானது.

இக்கட்டமைப்புகளில் ஆரம்ப கட்டப் பலவீனங்கள் இருக்கலாம். ஆனால் அவை பெரும்பாலும் ஜனநாயக முறைக்கூடாகத் தெரிவு செய்யப்பட்டவை.பொறுப்புக்கூறும் பண்பு மிக்கவை. நீண்டகால நோக்கில் திட்டமிடப்படுகின்றவை. இப்படிப்பட்ட கட்டமைப்புக்கள் வினைத்திறனோடு செயல்படுமாக இருந்தால் எதிர்காலத்தில் தமிழரசியலானது அறிவுபூர்வமான கட்டமைப்பு சார்ந்த ஒரு புதிய பண்பாட்டை வளர்த்துக் கொள்ளும் என்று நம்பலாம்.

# இழுவிசைக்குள் அகப்பட்டிருக்கும் தமிழ்

(18ம் பக்கம்தொடர்ச்சி) களிப்பூட்டி தம்பக்கம் இழுக்க முயற்சிக்கின்றன. பயிற்சிப்பட்டறை, கருத்தரங்குகள் என்ற பெயர்களில் மூளைச்சலைவை செய்யப்படுகின்றது. இங்கு மூளைச் சலவையின் நோக்கம் தமிழ்த்தேசியத்தை நீக்கம் செய்வதே.

ஆறாவது அபிவிருத்தி அரசியல் என்ற ஸ்லோகம் முன்னெடுக்கப்படுகின்றமையாகும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த ஸ்லோகத்தை முன்னெடுப்பதில் அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றார். அவரது அடுத்தடுத்த வடக்கு விஜயம் இதன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதாகும். தமிழ் இளைஞர்கள் அரசியலில் பெரியளவுக்கு நாட்டம் கொள்ளவில்லை. 40 வயதிற்கு மேற்பட்டவர்களே நாட்டம் கொள்கின்றனர் என பொன்மொழிகளை வேறு அவர் உதிர்த்து விடுகின்றார்.

கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த அபிவிருத்தி அரசியல் பைத்தியம் முற்றி விட்டது எனலாம். முஸ்லிம்கள் அரசுடன் இணைந்து இருந்ததினாலேயே அபிவிருத்தி கண்டனர். நாமும் அதற்கு முயற்சிக்க வேண்டும் என்ற விதை அங்கு விதைக்கப்படுகின்றது.

பிள்ளையானின் கட்சி இதில் தீவிரமாக உள்ளது. அக்கட்சியின் மூலதனம் முஸ்லிம் எதிர்ப்பும் வடக்கு எதிர்ப்பும் தான். இந்த இரண்டும் கிழக்கு தமிழ் மக்களுக்கு ஒருபோதும் உதவப் போவதில்லை.

முஸ்லிம் முன்னோடிகள் பலர் உரிமை அரசியலில் தமிழ் மக்கள் எங்கேயோ நிக்கின்றனர். நாம் பின்தங்கி நிற்கின்றோம் எனக் கூறத் தொடங்கியுள்ளனர். தமிழ் மக்கள் தொடர்ந்து போராடுகின்றனர். அவர்கள் எவ்வாறாவது தங்களுக்கான அரசியல் தீர்வை பெற்று விடுவார்கள். தாங்கள் தான் அடிமைகளாக இருக்க வேண்டிய நிலைமை தொடரும் என்கின்றனர். அடுத்த வாரம் புவிசார் பூகோள நெருக்கடிகளை பார்ப்போம்.

# தென்னிலங்கை அரசியலும் இந்திய எதிர்ப்பு...

(21ம் பக்கத் தொடர்ச்சி) பாக்கு நீரிணை மீதான ஈடுபாட்டு சார்ந்தும் வடிவமைக்கப்படுவதையே கண்டு கொள்ளக் கூடியதாக உள்ளது. அதாவது தென் இலங்கையின் அரசியல் மட்டுமல்லாது இந்து சமுத்திரத்தின் மீது செல்வாக்குச் செலுத்தும் சர்வதேச சக்திகளது நலனையும் பாதிப்பதாகத் தெரிகிறது. அதனையும் நோக்கியே அத்தகைய எதிர்ப்புவாதம் மேல் எழுகிறது. எதிர்ப்புவாதத்தை மேற்கொள்ளும் தென் இலங்கை சக்திகளை அவதானித்தால் புரிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. ஒரு காலப்பகுதியில் பிரித்தானிய ஆட்சியாளர்களது நலன் சார்ந்து இந்திய–இலங்கை புரிதல் எப்படி முரண்பாட்டுக்குள் நகர்த் தப்பட்டதோ அவ்வாறே தற்போதும் அந்நிய சக்திகளது நலனுக்கான நகர்வுகள் மேற்கொள்ளப்படுகிறது.

இரண்டு, இலங்கையின் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதென்பதே தற்போதைய அரசாங்கத்தின் நோக்கமாக உள்ளது என்பது வெளிப்படையான தெரிவாக உள்ளது. ஆனால் ஆழமாக உற்று நோக்கினால் பொருளாதார வளர்ச்சி என்பது அரசாங்கத்தின் திட்டமிடலாக அமைந்தாலும் தென் இலங்கையின் தீவிர அரசியல் சக்திகளது நகர்வு வேறுவிதமானதாக உள்ளது. இலங்கை பொருளாதார மீட்சி பெறாது விட்டாலும் பரவாயில்லை. இந்தியாவின் அரசியலுக்குள் அகப்பட்டு விடக்கூடாது என்பதில் கவனமாக உள்ளது.

21 ஆம் நூற்றாண்டு அரசியல் பொருளாதார அடிப்படைக்கான நூற்றாண்டாக விளங்கினாலும் தென் இலங்கை அரசியல் சக்திகள் இந்திய எதிர்ப்பு வாதத்தின் மூலம் இன உணர்வை முதன்மைப்படுத்த முயல்கின்றதை காணமுடிகிறது. இது இலங்கையின் எதிர்காலத்தை ஆரோக்கியமானதாக அமைக்கும் நோக்கில் இல்லை என்பதை கோடிட்டுக் காட்டுகிறது.

ஈழத்தமிழருடன் அதிகாரத்தைப் பகிர்வதில் எத்தகைய உத்தியும் இல்லாத அரசியல் சக்திகளது இருப்பும் வடக்கு, கிழக்கு சார்ந்த இந்திய அரசின் அணுகுமுறையும் இலங்கைத் தீவின் அரசியலை வேறுதிசைக்குள் நகர்த்த முனையும் என்பதையே காட்டுகிறது. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியானது, அதீதமானதாக மாறியுள்ள நிலையில், அதன் ஏனைய வளர்ச்சிகள் எதிர்கால பிராந்திய அரசியலை கட்டமைக்கக் கூடியதாக அமையும். இந்தியாவின் பிராந்தியங்கள் முதன்மை என்பது அதன் முக்கியத்துவத்தையே காட்டுகிறது. அதற்கான முக்கியத்துவம் பிராந்திய நாடுகளால் அனுசரிக்கப்படாத நிலை ஏற்படும் போது விளைவுகள் முரண்நிலையை தோற்றுவிக்கும்.

எனவே இலங்கைத் தீவின் இந்திய எதிர்ப்புவாதம் ஒன்றும் புதியதோ நிகழாததோ ஒன்றல்ல. மாறாக இன்றைய உலக ஒழுங்குமுறையில் அத்தகைய எதிர்ப்புவாதம் ஏற்படுத்தக்கூடிய அரசியல் இலங்கைத் தீவுக்கானதாகவே அமைய வாய்ப்புள்ளது. இலங்கைத் தீவின் பொருளாதாரம் மட்டுமல்ல அரசியலும் அதற்குள் நெருக்கடிக்குரியதாகவே தென்படுகிறது. இத்தகைய நகர்வுகளை இந்திய கொள்கை வகுப்பாளர்களும் அரசியல் சக்திகளும் கருத்தில் கொள்வதென்பது முக்கியமானதே. அதற்கான நடவடிக்கைகள் அதிகம் இலங்கைத் தீவில் நிகழ்வதாகவே தெரிகிறது.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation

10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து
தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள்
பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்.
அனுபவத்துடன் கூடிய அன்பான
சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com













# ஜனாதிபதி தேர்தலில் இருந்து பைடன் விலக வேண்டும் - ஜனநாயகக் கட்சியினர் தெரிவிப்பு! ஜனாதிபதித் தேர்தல் போட்டியில் இருந்து விலகப் போவதில்லையென பைடன் தெரிவிப்பு!



ஜனநாயக கட்சியின் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளராக போட்டியிடுவதிலிருந்து அமெரிக்காவின் தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடன் விலகிகொள்ள வேண்டும் என ஜனநாயக கட்சியின் மூன்றில் ஒருவர் கருதுவது ரொய்ட்டர்ஸ் கருத்துக் கணிப்பின் மூலம் தெரியவந்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்புடனான முதலவாது நேரடி விவாதத்தின்போது ஜோ பைடன் தடுமாற்றத்துடன் காணப்பட்டதை தொடர்ந்து அவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும் என ஜனநாயக கட்சியின் மூன்றில் ஒருவர் கருதுகின்றனர் என ரொய்ட்டர் தெரிவித்துள்ளது.

இதேவேளை பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களில் 40 வீதமானவர்கள் பைடனையும் 40 வீதமானவர்கள் டிரம்பினையும் ஆதரிக்கின்றனர் என கருத்துக்கணிப்பின் மூலம் தெரியவந்துள்ளதாக குறிப்பிட்டுள்ள ரொய்ட்டர் நேரடி விவாதத்தின் பின்னர் பைடனிற்கான ஆதரவு வீழ்ச்சியடையவில்லை என்பதை இது வெளிப்படுத்துகின்றது என குறிப்பிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்புடனான நேரடி விவாதத்தின் போது தடுமாறியதை தொடர்ந்து பைடன் தேர்தலில் மீண்டும் போட்டியிடும் முயற்சிகளை கைவிட வேண்டும் என 39 வீதமான ஜனநாயக கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை பைடனிற்கு பதில் ஜனநாயக கட்சியின் சார்பில் போட்டியிடுவதற்கு தகுதியானவர் என ரொய்ட்டர் முன் வைத்த பெயர்களில் முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமாவின் மனைவி மிச்செல் ஒபாமாவிற்கு அதிக ஆதரவு கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எது எப்படி இருந்த போதிலும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து விலக வேண்டும் என விடுக்கப்படும் வேண்டுகோள்களை ஏற்க மறுத்துள்ள அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தேர்தல் போட்டியை தொடரப் போவதாக குறிப்பிட்டுள்ளார்.

ஜோ பைடன் தனது பிரச்சார குழுவினர் ஜனநாயக கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆளுநர்களுடனான சந்திப்பின் போது இதனை தெரிவித்துள்ளார்.

ஜோ பைடன் தான் போட்டியிலிருந்து விலகப் போவதில்லை என தெரிவித்தார் என இந்த விடயம் குறித்து நன்கறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.


என்னை எவரும் வெளியே தள்ளவில்லை,நான் வெளியேறப் போவதில்லை இறுதி வரை தேர்தல் போட்டியில் நீடிப்பேன் என ஜோ பைடன் தெரிவித்தார் என அவரது பிரச்சார குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை ஜனாதிபதி ஜோபைடன் தேர்தல் போட்டியிலிருந்து விலகுவது குறித்து சிந்திக்கின்றாரா என்ற கேள்விக்கு பதிலளித்துள்ள வெள்ளை மாளிகையின் ஊடக செயலாளர் நிச்சயமாக இல்லை என குறிப்பிட்டுள்ளார்.

ஜனநாயக கட்சியின் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளராக போட்டியிடுவதிலிருந்து அமெரிக்காவின் தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடன் விலகிகொள்ள வேண்டும் என ஜனநாயக கட்சியின் மூன்றில் ஒருவர் கருதுவது ரொய்ட்டர்ஸ் கருத்துக்கணிப்பின் மூலம் தெரியவந்துள்ளது.



உ
சிவமயம்



# றொறன்ரோ திருச்செந்தூர் முருகன் ஆலயம் கனடா
# Toronto Thiruchendur Murugan Temple

19 Penn Dr. North York, ON M9L, 2A7. Tel : 416-744-9568

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்
அருள்மிகு றொறன்ரோ திருச்செந்தூர் முருகபெருமாள் மெய்யடியார்களே!

## அருள்மிகு றொறன்ரோ திருச்செந்தூர் முருகப்பெருமான் ஆலய வருடாந்த மகோற்சவ விஞ்ஞாபனம் - 2024

சகலவளங்களும் ஒருங்கே அமையப்பெற்ற ஒன்ராரியோ மாகாண நோர்த் யோர்க் நகரத்தில் கோவில் கொண்டு வேண்டுவோருக்கு வேண்டும் வரத்தை அள்ளிக் கொடுக்கும் திருச்செந்தூர் முருகப்பெருமானுக்கு நிகழும் குரோதி வருடம் ஆடி மாதம் 3ம் திகதி (18.07.2024) வியாழக்கிழமை வளர்பிறை துவாதசி திதியும் கேட்டை நட்சத்திரமும் கூடிய சுபயோக சுபதினத்தில் கொடியேற்றத்துடன் பதினொரு தினங்கள் பிரமோற்சவம் நடைபெற திருவருள் கைகூடியுள்ளது. பக்தர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொண்டு எம்பெருமாள் திருவருளை பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொடியேற்றம் | 18-07-2024 | வியாழக்கிழமை | சப்பறம் | 26-07-2024 | வெள்ளிக்கிழமை |
| தேர்த் திருவிழா | 27-07-2024 | சனிக்கிழமை | தீர்த்தம் | 28-07-2024 | ஞாயிற்றுக்கிழமை |
| பூங்காவனம் | 29-07-2024 | திங்கட்க்கிழமை | வயிரவர் மடை | 30-07-2024 | செவ்வாய்க்கிழமை |

கைலாசவாகனத்திருவிழா 24.07.2024 புதன்கிழமை

### உற்சவகால பூஜை நேரங்கள்

**காலை**
08:00 மணிக்கு ஆலய பூஜை
08:30 மணிக்கு சங்கல்ப்பம், கும்பபூஜை, அபிஷேகம்
10:00 மணிக்கு ஆலய பூஜை
11:30 மணிக்கு வசந்தமண்டப பூஜை

**மாலை**
05:30 மணிக்கு அபிஷேகம்
07:00 மணிக்கு ஆலய பூஜை
08:00 மணிக்கு வசந்தமண்டப பூஜை

### மகோற்சவகுருக்கள்
சிவாகம தத்துவநீதி
சிவஸ்ரீ. நாகரட்ன கார்த்திகேயக் குருக்கள்

**சாதகாச்சார்யார்**
வெங்கடரமண சர்மா
கொங்காதர குருக்கள்

**ஆலய பிரதமகுருக்கள்**
சிவாஹம சேகரம்" சிவஸ்ரீ தர்மபிரதீபன் குருக்கள்'
கண்ணன் குருக்கள்

**இணைக்குருமார்கள்**
பிரம்மஸ்ரீ கை. ஸ்ரீ ராகுலன் சர்மா
சிவாச்சார்யா திலகம்.
சிவஸ்ரீ து. ராதாகிருஷ்ணக் குருக்கள்

**ஆலய மங்கள வாத்தியம்**
திரு சிவமயம் குழுவினர்
(சிவநாதலயம் கனடா)

**ஆலய ஸ்தபதி**
சிற்பகலைமாமணி விஸ்வபிரம்மஸ்ரீ
செல்வராஜா குணாளன் கனகாலயா சிற்ப்பாலயம் கனடா

# ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்

ரொறன்ரோ-கனடா



## ஸ்ரீ வரசித்தி விநாயகர் ப்ரம்மோத்ஸவ திருநாட்களில் நடைபெறும் விஷேட அபிஷேகம், ஹோமம், அலங்கார உபசார பூஜை வழிபாடுகள்

## 14.07.2024 ஞாயிறு முதல் 28.07.2024 ஞாயிறு வரை

**07.07.2024 ஞாயிற்றுக்கிழமை – சமயதீட்சை**
காலை 7:45 மணி முதல் 11:00 மணி வரை அடியார்களுக்கு "சமயதீட்சை" வழங்கப்படும்.

**12.07.2024 வெள்ளிக்கிழமை – மாலை**
விக்னேஸ்வரபூஜை, அனுக்ஞை, கணபதி ஹோமம், சங்காபிஷேகம்.

**13.07.2024 சனிக்கிழமை**
வாஸ்துசாந்தி நடைபெறும்.

14.07.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 7:45 மணி முதல் விக்னேஸ்வரபூஜை, கும்பபூஜை, ஹோமம், அபிஷேகம், கூட்டுப்பிரார்த்தனை. காலை 10:00 மணிக்கு விஷேட பூஜை. காலை 11:00 மணிக்கு வசந்தமண்டப அலங்கார உபசார பூஜை கணபதிநாளம், வேத, கீத, ஸ்தோத்திர, திருமுறை உபசாரங்கள் தொடர்ந்து நாதஸ்வர மங்கள வாத்யக் கச்சேரி, விபூதி பிரசாதம், அன்னதானம் வழங்கல் என்பன நடைபெறும்.

**காலை**

| | |
|---|---|
| 7:45 மணிமுதல் | கும்பபூஜை, அடியார்கள் பங்குகொள்ளும் விஷேட ஹோமம் ஸ்நபனாபிஷேகம், கூட்டுப்பிரார்த்தனை |
| 10:00 மணிக்கு | விசேடபூஜை |
| 11:00 மணிக்கு | வசந்தமண்டப அலங்கார உபசார பூஜை நாதஸ்வர மங்கள வாத்யக் கச்சேரி விபூதி பிரசாதம், அன்னதானம் வழங்கல் |

**மாலை**

| | |
|---|---|
| 4:00 மணிமுதல் | கும்பபூஜை, அடியார்கள் பங்குகொள்ளும் விஷேட ஹோமம் ஸ்நபனாபிஷேகம், கூட்டுப்பிரார்த்தனை |
| 6:00 மணிக்கு | சாயரட்சைப்பூஜை |
| 7:00 மணிக்கு | வசந்தமண்டப அலங்கார உபசார பூஜை கலைநிகழ்ச்சி தொடர்ந்து விபூதி பிரசாதம் வழங்கல் |



**14.07.2024 ஞாயிறு – 1ம் நாள்**
ஓங்கார கணபதி வடிவக் காட்சி
கலைஞர்களின் தாளவாத்ய லயவின்யாசம்

**15.07.2024 திங்கள் – 2ம் நாள்**
மயூர கணபதி வடிவக் காட்சி
கலைஞர்களின் வயலின் ஆராதனை

**16.07.2024 செவ்வாய் – 3ம் நாள்**
சூரியப்பிரபை வடிவக் காட்சி
கலைஞர்களின் வாத்ய ஆராதனை

**17.07.2024 புதன் – 4ம் நாள்**
வித்யா கணபதி வடிவக் காட்சி
கலைஞர்களின் வீணை ஆராதனை

**18.07.2024 வியாழன் – 5ம் நாள்**
அனந்தசயன வடிவக் காட்சி
அந்தணர்களின் வேதபாராயணம்

**19.07.2024 வெள்ளி – 6ம் நாள்**
சிவலிங்கபூஜை வடிவக் காட்சி
கைலாச வாகன அலங்காரக் காட்சி

**20.07.2024 சனி – 7ம் நாள்**
நர்த்தன கணபதி வடிவக் காட்சி
கலைஞர்களின் நடன சமர்ப்பணம்

**21.07.2024 ஞாயிறு – 8ம் நாள்**
கப்பல் திருவிழா
கப்பல் வடிவ அலங்காரக் காட்சி

**22.07.2024 திங்கள் – 9ம் நாள்**
சங்கீத கணபதி வடிவக் காட்சி
கலைஞர்களின் பஞ்சரத்ன கீர்த்தனை இசை ஆராதனை

**23.07.2024 செவ்வாய் – 10ம் நாள்**
திருமஞ்சத் திருக்காட்சி
அழகிய மஞ்ச அலங்காரக் காட்சி

**24.07.2024 புதன் – 11ம் நாள்**
நம்பியாண்டார் நம்பி திருமுறை
இந்துக்கல்லூரி மாணவர்களால் நாடகம், திருமுறை பாராயணம்

**25.07.2024 வியாழன் – 12ம் நாள்**
மாம்பழத் திருவிழா
இந்துக்கல்லூரி மாணவர்களால் நாடகமாக வழங்கப்படும்


**26.07.2024 வெள்ளி – 13ம் நாள்**
சப்பற அலங்காரக் காட்சி
மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்டு

**27.07.2024 சனி – 14ம் நாள்**
தேர் அலங்காரக்காட்சி

**28.07.2024 ஞாயிறு – 15ம் நாள்**
தீர்த்தத் திருநாள்
காலை: விஷேட ஹோமம், அபிஷேகம், பூஜை
மாலை: திருவூஞ்சல்

**29.07.2024 திங்கள்**
பூங்காவனம்
சங்கீத இசை நிகழ்ச்சி

**30.07.2024 செவ்வாய்**
வைரவர் மடை
காலை: பிராயச்சித்த அபிஷேகம், மாலை: வைரவர் மடை



விரத காலங்களில் 15 தினங்களும் அன்னதானம், தண்ணீர்ப் பந்தல் (தாகசாந்தி) வழங்க விரும்பும் அடியார்கள் ஆலய காரியாலயத்தில் முற்கூட்டியே பதிவு செய்துகொள்ளவும்.

மிகவும் சிறப்பாகவும் விமரிசையாகவும் நடைபெறவிருக்கும் அலங்கார உபசார பூஜை வழிபாடுகளில் அந்தணப் பெருமக்கள், ஆலய நிர்வாகத்தினர், வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை இணையத்தள ஊடகத்துறையினர், தமிழ் சமயப் பெரியோர்கள், சமூக நலன் விரும்பிகள், தமிழ் பற்றாளர்கள், கல்விமான்கள், சான்றோர்கள், கலைஞர்கள், தொண்டர் ஸ்தாபனத்தினர், வர்த்தகப் பிரமுகர்கள், மன்ற உறுப்பினர்கள், சமூக ஊக்குவிப்பாளர்கள், பழைய மாணவர் சங்கத்தினர், ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், உபயகாரர்கள், தொண்டர்கள், சமய சொற்பொழிவாளர்கள், பஜனைக் குழுவினர்கள், அடியார்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**Aadi Amavasai Viratham**
ஆடி அமாவாசை விரதம்
(பிதிர்தர்ப்பணம்)
03.08.2024 சனிக்கிழமை


**Aadipoora Viratham**
ஆடிப்பூர ருதுசாந்திப் பெருவிழா
06.08.2024 வியாழக்கிழமை

**Varaluxmi Viratham**
வரலட்சுமி விரதம்
(சுமங்கலி பூஜை, திருவிளக்குப் பூஜை)
16.08.2024 வெள்ளிக்கிழமை



## அனைவரும் வருக! இறையருள் பெறுக!

இங்ஙனம் சிவப்பணியில் நிற்கும்
"சிவாச்சார்ய குலபூஷணம்", "சிவாச்சார்ய கலாநிதி"
**சிவஸ்ரீ. பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள்**
ஆலய பிரதமகுரு, ஆலயஸ்தாபகர், முதல்வர்



1.416.291.8500 www.vinaayagar.com vinaayagar@gmail.com vinaayagar

# ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்

ரொறன்ரோ-கனடா



## ஸ்ரீ வரசித்தி விநாயகர் கருங்கல் திருக்கோவில்

## சங்குஸ்தாபன மஹோத்ஸவம்

## அடிக்கல்நாட்டு விழா அழைப்பிதழ்

**July 11th & July 12th, 2024**





**12.07.2024**

**வெள்ளிக்கிழமை**

**காலை 10:00 மணிமுதல் 11:15 மணிவரையுள்ள**

சுப நல்வேளையில்

ஸ்ரீ வரசித்தி விநாயகப் பெருமானின் புதிய கருங்கல் ஆலயத்திற்குரிய சங்குஸ்தாபனம்



கருங்கல் திருக்கோவில் ஸ்தபதியார்
"சிற்பக்கலையரசன்" திரு. சரவணமுத்து ஜெயராஜா
"சிற்பக்கலாரத்தினம்" திரு. சக்திவிநாயகம்

**11.07.2024 வியாழக்கிழமை**

**அதிகாலை 4:10 மணிமுதல்**

விக்னேஸ்வர பூஜை, அனுக்ஞை, புண்யாகவாசனம், மஹாகணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், வாஸ்துசாந்தி, பூமிபூஜை.

**காலை 7:15 மணிமுதல்**

சங்குகளுக்கு விநாயகர் சகஸ்ரநாம அர்ச்சனை-ஹோமம், கணபதி மூல மந்திர, மாலா மந்திர, காயத்திரி மந்திர ஹோமம், ருத்ர த்ருசதி அர்ச்சனை-ஹோமம், லலிதா த்ருசதி அர்ச்சனை-ஹோமம், தேவிகட்கமாலா அர்ச்சனை-ஹோமம்.

**மாலை 4:30 மணிமுதல்**

சங்குகளுக்குரிய விஷேட பூஜைகள்: விஷ்ணு த்ருசதி அர்ச்சனை-ஹோமம், மஹாலக்ஷ்மி த்ருசதி அர்ச்சனை-ஹோமம், சத்ருசம்ஹார த்ருசதி அர்ச்சனை-ஹோமம், நவக்கிரக சூக்த ஹோமம், பைரவர் அஷ்டோத்திர அர்ச்சனை-ஹோமம், அஸ்திர ஹோமம்.

**12.07.2024 வெள்ளிக்கிழமை**

**காலை 7:15 மணிமுதல்**

விநாயகர் வழிபாடு, புண்யாகவாசனம், கருங்கல் ஆலய திருப்பணி உபயகாரர்கள் மற்றும் அடியவர்களுக்குரிய சங்கல்பம், விஷேட ஷண்ணவதி திரவிய ஹோமம், கோ(பசு) பூஜை, அஸ்வ(குதிரை) பூஜை மஹாபூர்ணாகுதி.

**காலை 10:00 மணிமுதல் 11:15 மணிவரையுள்ள**
சுப நல்வேளையில்
ஸ்ரீ வரசித்தி விநாயகப் பெருமானின் புதிய கருங்கல் ஆலயத்திற்குரிய சங்குஸ்தாபனம் அடிக்கல்நாட்டு விழா நடைபெற்று.

மிகவும் சிறப்பாகவும் விமர்சையாகவும் நடைபெறவிருக்கும் சங்குஸ்தாபன அடிக்கல் நாட்டுவிழாவில் அந்தணப் பெருமக்கள், ஆலய நிர்வாகத்தினர், வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை, இணையத்தள ஊடகத்துறையினர், தமிழ் சமயப் பெரியோர்கள், சமூக நலன் விரும்பிகள், தமிழ் பற்றாளர்கள், கல்விமான்கள், சான்றோர்கள், கலைஞர்கள், தொண்டர் ஸ்தாபனத்தினர், வர்த்தகப் பிரமுகர்கள், மன்ற உறுப்பினர்கள், சமூக ஊக்குவிப்பாளர்கள், பழைய மாணவர் சங்கத்தினர், ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், உபயகாரர்கள், தொண்டர்கள், சமய சொற்பொழிவாளர்கள், பஜனைக் குழுவினர்கள், அடியார்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.



"சிவாச்சார்ய குலபூஷணம்", "சிவாச்சார்ய கலாநிதி"
சிவஸ்ரீ. பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள்
ஆலய பிரதமகுரு, ஆலயஸ்தாபகர், முதல்வர் - அறங்காவலர் சபை.
ரொறன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்

3025 Kennedy Rd, Unit 10,
Scarborough ON M1V1S3

1.416.291.8500
www.vinaayagar.com
vinaayagar



July
20
CANADA EVENT CENTRE
300 WATER ST,
WHITBY, ON
L1N 9B6
AT: 6:00 PM
SATURDAY
VENNILA ENTERTAINERS
பெருமையுடன் வழங்கும்
MANO
LIVE IN
TORONTO
GLOBAL
FINANCIAL SERVICES
ACCOUNTING & IMMIGRATION SERVICES
RAVI PONNUSAMY
Financial Broker
403 400 6003
Ravi_kumar103@yahoo.ca
#310, 100 cowdray crt
Scarborough,ON M1S 5C8
Life Insurance
Travel insurance
Super Visa Ins
RRSP
RESP
TFSA
FHSA
Rajaganapathy
vijay TV
Super Singer
Anu Anand
vijay TV
Super Singer
Muthuchippi
Shruthi
vijay TV
Super Singer
GLOBAL
FINANCIAL SERVICES
We provide comprehensive accounting & immigration services for individuals and businesses.
Our Services:
Accounting & Bookkeeping
Tax Preparation
All types of visa services
Investment
Contact Us:
www.globalfinancialservice.ca
THUSHE NAVARATNARAJAH
Sales Representative
416.357.4475
realtor.thusheegmail.com
THUSHE REAL ESTATE
RE/MAX
Crossroads
ABI SRICHANDRADAS
REALTOR®
Dir: 647.973.9006
abi.srichan@yahoo.com
ROYAL LEPAGE ignite
Bus: 416.282.3333 Fax: 416.272.3333
D2-795 Milner Ave. Toronto ON. M1B 3C3
Independently Owned And Operated
YASI RAVICHANDRAN
REALTOR®
647.273.8121
realty@yasiravi.com
www.YasiRavi.com
ROYAL LEPAGE ignite
Bus: 416.282.3333 Fax: 416.272.3333
D2-795 Milner Ave. Toronto ON. M1B 3C3
Independently Owned And Operated
ஈழநாடு
தொடர்புகளுக்கு: 437-234-8040 | 647-856-1191

சிவமயம்



காருறழ் வெய்ய களிற்றிடையாகிப்
பாரிட எண்ணிலர் பாங்குற நண்ணப்
பூரணை புட்கலை பூம்புற மேவ
வாரணம் ஊர்பவன் முன்னுற வந்தான்

# கனடிய அனலைதீவு ஐயனார் ஆலயம்

## Analaitivu Iyanar Temple of Canada

22 Goodmark Place, Unit #13, Etobicoke, Ont M9W 6R2 Tel : (416) 679-9899

## குரோதி வருஷ மஹோற்சவ விஞ்ஞாபனம்
## 12-07-2024 முதல் 24-07-2024 வரை

ஐயன் மெய்யடியார்களே !
நிகழும் மங்களகரமான குரோதி வருடம் ஆனித்திங்கள் 30ம் நாள் 13.07.2024 சனிக்கிழமை பூர்வ பட்ச அட்டமி திதியும் சித்திரை நட்சத்திரமும் கூடிய சுபயோக சுபதினத்தில் அருள்மிகு கனடிய அனலைதீவு ஸ்ரீ பூரணை புட்கலை அம்பாள் சமேத ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார் பெருமானுக்கு பகல் 11:35 மணியளவில் துவஜாரோகணம் (கொடியேற்றம்) நடைபெற்று 10 தினங்கள் மஹோற்சவம் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

## மஹோற்சவ கால நிகழ்வுகள்

| திருவிழா | திகதி | கிழமை | உற்சவ விபரம் |
|---|---|---|---|
| | 12.07.2024 | வெள்ளி | மஹோற்சவ கர்மாரம்பம் விநாயகர் வழிபாடு புண்யாகவாசனம் அனுக்ஞை மிருத்சங்கிரஹணம் |
| 1ம் நாள் | 13.07.2024 | சனி | காலை துவஜாரோகணம் (கொடியேற்றம்), மாலை உற்சவம் |
| 2ம் நாள் | 14.07.2024 | ஞாயிறு | காலை 1008 சங்காபிஷேகம் உற்சவம், மாலை உற்சவம் |
| 3ம் நாள் | 15.07.2024 | திங்கள் | காலை, மாலை உற்சவம் |
| 4ம் நாள் | 16.07.2024 | செவ்வாய் | காலை, மாலை உற்சவம் |
| 5ம் நாள் | 17.07.2024 | புதன் | காலை, மாலை உற்சவம் |
| 6ம் நாள் | 18.07.2024 | வியாழன் | காலை, மாலை உற்சவம் |
| 7ம் நாள் | 19.07.2024 | வெள்ளி | காலை, மாலை உற்சவம் |
| 8ம் நாள் | 20.07.2024 | சனி | காலை உற்சவம், மாலை (4 மணி) வேட்டைத்திருவிழா, இரவு சப்பறத்திருவிழா |
| 9ம் நாள் | 21.07.2024 | ஞாயிறு | காலை தேர்த்திருவிழா, பச்சை சாத்தி வழிபாடு, பிராயச்சித்த அபிஷேகம் |
| 10ம் நாள் | 22.07.2024 | திங்கள் | காலை தீர்த்தோற்சவம், மாலை துவஜா அவரோஹணம் (கொடியிறக்கம்) |
| 11ம் நாள் | 23.07.2024 | செவ்வாய் | மாலை பூங்காவனம் |
| 12ம் நாள் | 24.07.2024 | புதன் | மாலை பைரவர் மடை |

மஹோற்சவகுரு
ஆகமகலாரத்னம், ஆகமபிரவிணா கிரியா தத்வநிதி, கிரியா பூஷணம் சாதகலா மணி, அலங்கார பூஷணம்
**ஈசான சிவாச்சாரியார் சிவஸ்ரீ சி.சந்திரகுமாரக் குருக்கள்**
(ஸ்ரீ பொன்னம்பல வாணேஸ்வரர் தேவஸ்தானம் முன்னாள் குருமணி- கொழும்பு)

ஆலய குரு
**ஸ்ரீ நவநீத கிருஷ்ண சர்மா**

### கொடியேற்ற நிகழ்வுகள்

06:00 மணி காலை பூசை
07:00 மணி நவகலச அபிசேகம்
09:00 மணி விசேட பூசை
10:00 மணி வசந்த மண்டப பூசை
11:35 மணி கொடியேற்றம்

### காலை நிகழ்வுகள்

07:00 மணி காலை பூசை
08:00 மணி நவகலச அபிசேகம்
10:00 மணி ஸ்தம்ப பூசை
11:30 மணி வசந்த மண்டப பூசை
01:00 மணி பிரசாதம் வழங்குதல்

### மாலை நிகழ்வுகள்

04:30 மணி உருத்திரகும்ப அபிசேகம்
06:30 மணி விசேட பூசை
07:00 மணி ஸ்தம்ப பூசை
08:00 மணி வசந்த மண்டப பூசை
09:30 மணி பிரசாதம் வழங்குதல்

கற்பூரச்சட்டி, பாற்குடம் மற்றும் நேர்த்திகள் செய்ய விரும்பும் அடியார்கள் முன்கூட்டியே ஆலயத்தில் பதிவு செய்யவும். மேலும் இரவுத்திருவிழாவின் போது தவில், நாதஸ்வர இசைக்கச்சேரி மற்றும் இன்னிசை, பரதநாட்டிய நிகழ்வுகளும் நடைபெறும். மஹோற்சவத்தை சிறப்பிக்க சக ஆலயங்களின் குருமார்கள், ஆலய அறங்காவலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். திருவிழா நாட்களில் தங்களால் இயன்ற பால், தயிர், நெய், பூக்கள், மாலைகள், அன்னதான பொருட்கள் மற்றும் அபிஷேக திரவியங்களை ஆலயத்திற்கு வழங்கி ஐயனார் அருள் பெற வேண்டுகின்றோம்.

குலம் தழைக்க குலதெய்வ வழிபாடு முக்கியம். திருவிழாக் காலங்களில்
குலதெய்வ வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

– ஆலய அறங்காவலர் சபை

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"